T. 1625.

தாளவொலி எண் இரண்டு.

மார்க்க தாளமெனும்

# நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா.


ஆடலாசிரியர்

**திருவம்பலஞரால்**

இயற்றப்பெற்றது.


---


கோவை

சி. கு. நாராயணசாமி முதலியாரால்

பதிப்பிக்கப் பெற்றது.

**1941.**

தாள வொலி எண் இரண்டு.

மார்க்க தாள்மேனு

# நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா.

இது

கோங்கின் பெருமாநல்லூர்

பிரபல ஆடலாசிரியர்,

## திருவம்பலனர் அவர்களால்

இயற்றப்பெற்றது.

❋

கோவை

சி. கு. நாராயணசாமி முதலியாரால்

கோயமுத்தூர்

குருதேவா அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

அச்சுரிமை பெற்றது.] 1941 [விலை அணு நான்கு.

# பொருள் அடக்கம்.


| விஷயம். | | பக்கங்கள். |
|---|---|---|
| | பதிப்புரை. | 1—5 |
| 1 | ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் தமது திருப்புகழ் பாடல்களுள் நூற்றெட்டுத் தாளங்களின் சில பெயர்களையும், தாளச்சொற்கட்டுகளையும், ஜதிகளையும்பற்றிக் கூறியிருப்பதற்கு சில உதாரணங்கள் | 6—11 |
| 2 | நூலாசிரியர் வரலாறு | 12—14 |
| 3 | மாத்திரை விவரம் | 15—16 |
| 4 | சப்தாங்களைத் தாளரூபமாகக் கைகளில் உபயோகிக்கும் விதம் | 16 |
| 5 | நூற்றெட்டுத் தாளங்களுக்குரிய எட்டுக்கணங்களும், அவற்றின் அடையாளங்களும் | 17—18 |
| 6 | நூற்றெட்டுத் தாளங்களுக்குரிய விவரம் | 18—22 |
| 7 | நூல்—நூற்றெட்டு மாத்திரைத்தாளக் கலிவெண்பாக்கள் | 1—24 |
| 8 | நூற்றெட்டு, முப்பத்தைந்து தாளங்களுக்குரிய அங்கங்களின் வடிவங்களும், பெயர்களும், மாத்திரைகளும் | 25—26 |
| 9 | நூற்றெட்டுத் தாளங்களின் பெயர்கள் | 27—28 |
| 10 | ,, ,, அகராதி வரிசை | 29—30 |

# பதிப்புரை.

"நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா," "நூற்றெட்டு மாத்திரைத் தாளங்களின் வெண்பா அந்தாதி" என்ற இரு தமிழ் நூல்களும் தாம் அரிதிற் றேடியவையென்றும், பனை ஓலைகளில் எழுதப்பெற்ற அச்சுவடிகளைக் காகிதத்தில் பிரதிசெய்து உடுமலைப் பேட்டை தாலூகா, வீதம்பட்டியிலுள்ள சோதிடரும், சைவ சீலரும், இசைப்புலவருமாகிய ஸ்ரீமான் த. சுப்பிரமணிய முதலியார் அவர்களிடம் கொடுத்துப் பரிசோதிக்கச்சொல்லிப் பிழை நீக்கப்பட்டவையென்றும் கூறித் திருப்பேரூர்த் தமிழன்பர் ஸ்ரீ த. சுந்தரம் என்பார் அவற்றை என்பால் அன்புகூர்ந்து லயஞான அறிஞர்கள் இன்புறுமாறு அச்சேற்றித்தருப்படி அளித்தனர். அன்பர் வேண்டுகோட்கு இசைந்து அவற்றைப்பெற்று மிகுந்த கவனமாகவும், சாவதானமாகவும் முழுதும் வாசித்துப் பார்த்தேன். அப்பொழுது என் நினைவில் முன்னொரு காலத்தில் மிகக்கவனித்துப் படித்திருந்த "நூற்றெட்டு மாத்திரைத் தாளபத்தியங்கள்" என்ற ஆந்திர மொழி நூல் எட்டியது. அதனையும், தமிழிலுள்ள 'தாள சமுத்திரம்' 'தாளவகையோத்து' 'சங்கீத சுவய போதினி' 'கீதவாத்திய நடன ரஞ்சனம்' 'சங்கீத சந்திரிகை' முதலிய நூல்களையும், 'தாள தீபிகை,' 'காயக லோசனம்' 'சங்கீத ரத்னாகரம்' முதலிய தெலுங்கு பாஷையிலுள்ள நூல்களையும் அருகில் வைத்துக்கொண்டு மேற்குறித்த கையேட்டுப் பிரதிகளை ஒத்திட்டுப் பார்த்தேன். அங்ஙனம் பார்த்த எனக்கு,

"அரைமாத் திரயேக தாளம்புகா செலுவுந்து, திருத சேகரம்பு மூக்காலு மாத்திர" என்று தொடங்கி — "பரத மதம்புன வருச தோட, சரஸ குணஹார தஞ்சகா புரஹிஹார, கிரிதாராச்சுத கோவிந்த ஹரிமுகுந்த பத்மதள நேத்ர நாரதப் பிரணுதகாத்ர, கோரதானவ கஜசிம்ம நரசிம்ம" என்று இறுதியடி முடிவு பெறுகிற இருபது

சீச பத்தியங்களையே முதனூலாக வைத்துக்கொண்டு ஆசிரியர் திருவம்பலனு இந்நூல்களை இயற்றியிருக்கவேண்டுமென்று தோன்றியது. உண்மையும் அப்படியேதான்.

தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை அறிவும், லய ஞானத்தில் தெளிந்த புத்தியும், அநுபவ ஞானமும் இனிது வாய்க்கப்பெற்ற பெருமாநல்லூர்த் திருவம்பலனார், தாம் இயற்றிய நூல்களுள் முதலாவதற்கு "நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா" என்ற பெயர் தந்து, அரியதும், இனியதுமான கலிவெண்பாக்களால் நூற்றெட்டுத் தாளங்களுக்குரிய பெயர்களையும், அங்கங்களையும், மாத்திரைகளையும் தெளிவுபெறக் கூறியும், இரண்டாவதற்கு "நூற்றெட்டுத் தாள வெண்பா வந்தாதி" என்ற நாமங்கொடுத்துத் தமிழ்ப்பாவினத்தில் அந்தாதித் தொடையில் இருபத்தைந்து வெண்பாக்களால் நூற்றெட்டுத் தாளங்கட்குரிய பெயர்களையும், வரிசைகளையும் அழகு விளங்குமாறு இயற்றியிருக்கின்றனர்.

இருபத்தைந்து வெண்பாக்களால் இயற்றப்பெற்ற வெண்பா வந்தாதியில், கடவுள் வாழ்த்தாக அமைந்த காப்பு வெண்பாவில் கணபதிக்கு வணக்கமும், இரண்டாஞ் செய்யுளில் ஆக்கியோன் பெயரும், வழியும் கூறப்பெற்றிருக்கின்றன. இறுதியாகவுள்ள இரண்டு வெண்பாக்களில நூலின் நுதலிய பொருளும், கேட்போர் பயனும், பாயிரவுறுப்பும் மொழியப்பட்டுள்ளன. எஞ்சிய வெண்பாக்களில் ஒவ்வோர் வெண்பாவுக்கும், ஐந்தைந்து தாளங்களாக இருபது வெண்பாக்களில் நூறு தாளங்களும, நன்னான்கு தாளங்களாக இரண்டு வெண்பாக்களிலுமாக நூற்றெட்டுத் தாளங்களின் இயல்களை அழகுபெறப்பாடி முடித்திருக்கின்றனர். இருபத்தைந்து எண்களான இவ்வெண்பாக்கள் அந்தாதித் தொடையில் இனிது பெற அமைந்து கற்பவர்களைக் காமுறுத்துகின்றன.

முதலாவதாகிய நூற்றெட்டு மாத்திரை தாளக் கலிவெண் பாக்கண்ணிகள், நூற்றெட்டுத் தாளங்களையும், அவற்றிற்குரிய அங்கம் முதலியவற்றையும் முறையாக வரிசைபெறக் கூறுகின்றன.

இருபகுதியாக இனிதுற யாக்கப்பெற்றுள்ள நூல்களிற் காணும் நேரிசை வெண்பாக்களும், கலிவெண்பாக் கண்ணிகளும், கற்போர் உள்ளங்களில் எளிதாகப் பதியும்படியாகவும், சொற் செறிவு, பொருட்செறிவு, ஓசையின்பம் விளங்குமாறும் அழகு பெற்று ஒளிர்கின்றன. அம்மட்டோ! சுருங்கச்சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல், முதலிய பத்தழகுகளும், எதுகை, மோனை முதலிய நயங்களும் கற்றோர் வியந்து பாராட்டுமாறு விளங்குகின்றன.

'தாள சமுத்திரம்' 'தாளவகையோத்து' 'சங்கீத சந்திரிகை' 'சங்கீத ஸ்வயபோதினி' முதலிய தாள சம்பந்தமான தமிழ நூல்கள், மார்க்க தாளமாகிய நூற்றெட்டுத் தாளங்களைப்பற்றிப் பொது வகையாகக் கூறிச்செல்கின்றனவேயன்றிச் சிறப்பு வகையில் அவைகள், அவ்வத்தாளங்கள் உபயோகிக்கும் முறை, அங்கங்கள் இன்னின்னவை, மாத்திரை அளவுகள் இவ்வளவு, அவற்றிற்குரிய ஆதாரங்கள் இன்னவையென்பவற்றைத் திட்டமாக வரையறுத்து, ஐயத்திற்கிடனின்றித் தெளிவாகக்கூறவில்லை. தாள நூற்களை அச்சிட்ட அன்பர்களுங்கூட அவை சற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் கவனிக்காமற் சென்றனர். இவற்றால் மார்க்கதாளங்கள், இசைக்கருவி வல்லார்களுக்கும், பாடகர்களுக்கும் பயன் தராமல் வழக்கத்திலும் சுருக்கம் பெற்றன. இக்குறைகள் இயன்றளவு நிவர்த்திபெற்று, கானக்கலை அறிஞர்கள், வாய்ப்பாடகர், வாத்தியக் காரர்கள், ஆகிய வித்துவான்கள் விரும்பிக் கற்கவும், கற்றுத் திற மை பெறவும், மறைந்துபோன மார்க்க தாளங்கள் மீண்டும் புத் துயிர் பெற்றுப் புனருத்தாரணம் அடையவும் வேண்டுமென்பது

எனது இடைவிடாத கோரிக்கை அவற்றிற்குச் சமயமும், காலமும் வாய்க்கப்பெறாமல் இதுகாறும் தடைப்பட்டே வந்தது.

> "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி
> எடுத்த கருமங்க ளாகா," என்பது மூதுரையன்றோ?

எனது இடைவிடாத முயற்சி கைகூடப்பெறுவதற்கு இன்றுதான் சுபமுகூர்த்தம் கிட்டியது. இதனை நன்னாளாகக் கொண்டு அடியேன் ஆசிரியரின் முகமாகவும், ஆராய்ச்சி வகையாலும், அநுபவ வாயிலாகவும், பல்லோர்வாய்க் கேட்டும் அறிந்த முப்பத்திஐந்து, நூற்றெட்டுத் தாளங்கள் வந்த வரலாறுகளையும், தாள இலக்கணம், மாத்திரை விவரம், அங்கங்களின் விளக்கம், அவற்றை உபயோகிக்கும் முறை முதலியவற்றையும் முறையாக நூன்முகப்பில் ஒருவாறு விளக்கியுள்ளேன். இவற்றில் குற்றம், குறைகள் இருக்கலாம். அவற்றைக் காணும் லய ஞான அறிஞர்கள், அவை எனது அறியாமையென்று விலக்கிக் குணத்தை மட்டும் கிரகிக்கும்படி கோருகிறேன்.

இந்நூற்களை யான் அச்சிற் பதிப்பிக்கத் துணிந்தது தென்னாட்டுச் சங்கீத வித்துவான்களுள், லயஞான விற்பனர்களும், தோற்கருவி, துளைக்கருவி நரம்புக்கருவி வாத்திய வகையினரும், வாய்ப்பாடகர் முதலினோர்களும் தேசீயதாளமாகிய முப்பத்தைந்து தாளங்களைத் தெரிந்து, அவற்றைப் பழக்கத்திலும் வைத்துக்கொண்டிருப்பதுபோலவே, மார்க்க தாளமாகிய நூற்றெட்டுத் தாளங்களையும், முறையாகத் தெரிந்து அவற்றை அநுபவத்திலும் கைக்கொண்டிருக்க வேண்டுமென்னும் பெரு விருப்பமும், தென்னாடாகிய இத்தமிழ் நாட்டில், தாள சம்பந்தமாக இதுவரையிலும் வெளிவந்த நூல்கள் பெரும்பகுதி தெலுங்கு மொழியிலும், வடமொழியிலும், ஹிந்தி, நாகரம் முதலிய பாஷைகளிலுமேயாயிருப்பதனால், தாய் மொழியாகிய தமிழ் மொழியில் தக்க முறையில்

லய ஞானத்தைத் தெளிவுபெறக்கூறும் தாள நூல்கள் இல்லாத குறையை நிவர்த்திக்க வேண்டுமென்ற கருத்துமேயாம்.

புதுப் புதுச் சக்திகள் உலகில் நாடோறும் புதிய புதிய உருக்கள் பெற்றுப் புதுமையுடன் வெளிவரும் இக்காலத்தில், சுமார் 50, 60 ஆண்டுகளுக்கு முன் பழக்கத்திலிருந்து மறைந்துபோன மார்க்கதாளப் பகுதியாகிய நூற்றெட்டுத் தாளப் பயிற்சியைப் பண்டுபோலவே மீண்டும் பழக்கத்திற்குக் கொண்டுவருவதும் இன்றியமையாததாகும். இத்திருத்தொண்டில் என்னை ஈடுபடுத்தித் தொழில் புரியுமாறு கருணைபாலித்த கண்ணுதலோன் காளைப் புதல்வன் கதிர்வேற் கந்தனின் பொன்னார் திருவடியைப் போற்றுகின்றேன்.

ஓலைச் சுவடிகளாகிய தாளச் சுவடிகளை என்பாற்றந்து அச்சேற்றித் தமிழுலகிற்குத் தருமாறு கூறிய அன்பர் த. சுந்தரம் அவர்கட்கும், சிறப்புப் பாயிரம் எழுதி உதவிய பெரியாருக்கும், நூல்கள் அச்சேறுவதற்கு அருள் சுரந்து பொருள் உதவிய உயர்திரு. சி. ர. வேங்கடகிருஷ்ண முதலியாரவர்கட்கும் எனது அன்பார்ந்த வந்தனமும், நன்றியறிதலும் என்றும் உரியதாகுக.

கலைமகள் தமிழகம்,<br>விக்கிரம ஆண்டு<br>முதல் நாள்<br>பேரூர்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,<br>கோவை.

## ஸ்ரீ. அருணகிரிநாத சுவாமிகள்

### தமது திருப்புகழ்ப் பாடல்களுள், நூற்றெட்டுத் தாளங்களையும், தாள தசப்பிராணன்களையும்பற்றிக் கூறியிருக்கின்றனர் என்பதற்குச் சில உதாரணங்கள்.

———::———

நூற்றெட்டுத் தாளங்களுள், "நிச்சாருகம்" என்னும் பெயருடைய தாளம் ஐம்பத்தோராவது எண்ணையுடையது. இத்தாளத்திற்கு மாத்திரை இரண்டேகால் என்றும், இசைவு அங்கம் ஒரு லகுவென்றும், விடுதல் அங்கம் ஒரு லகுவிராமம் என்றும், அதன் அக்கரம் ஒன்பது என்றும் கூறப்பட்டுள்ளன. மார்க்கதாளமாகிய இதனை இப்பொழுது சங்கீத வித்துவான்கள் தங்களது கச்சேரிகளில் உபயோகிப்பதை விட்டிருக்கின்றனர். காரணம் மிகவும் சிரமமாயிருப்பதுபற்றி. ஆனால், சந்தக்கவிகளில் ஒப்புயர்வற்ற புலமைப் பெரியாரும், முருகனருள் முழுக்கப் பெற்றவரும், இற்றைக்கு நானூற்றி அறுபது ஆண்டுகளுக்கு முன் விளங்கியிருந்தவருமான ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் தாம் பாடிய திருப்புகழ்ப் பாடல்களில் மார்க்கதாளமாகிய நூற்றெட்டுத் தாளங்களை மிகுதியாக உபயோகித்துப் பாடியிருக்கின்றனர். அவற்றுள் சில அடியில் வருமாறு:—

(1) கொங்குநாட்டுத் தேவார வைப்புத் தலங்களுள் ஓர் எண்ணையுடையதும், பிறவாநெறித்தலம் எனும் பெருமை சிறந்ததுமான திருப்பேரூர் திருத்தலத்துத் திருப்புகழுள் "தீராப்பிணி தீர" என்ற தலைப்பையுடைய திருப்புகழ்ப் பாடலுக்கு உரிய தாளம் நிச்சாருகம் என்பது. இதன் இலக்கணம் 'தீரா'! என்னும் நெடிலிணைக்கு மாத்திரை நான்கு. 'பிணி' என்னும் குறிலிணைக்கு மாத்திரை இரண்டு. தீ—ர என்னும் நெடிற்குறிலிணைக்கு மாத்திரை மூன்று. ஆக மாத்திரைகள் ஒன்பது. இதனை ஒன்பது

அக்கரங்கள் என்றுங்கூடக் கூறுவர். மாத்திரைக்கிரமம், அக்கரக் கிரமம் என்னும் இரண்டில், மாத்திரைக் கிரமப்படி நிச்சாருக தாளம் இரண்டேகால் மாத்திரை யாகிறது. தாளம் எழுதாக் கிளவியாகிய வேதப்பொருளானதால், எழுத்தால் அறிவிக்கக்கூடாத தென்றும், ஆசிரியன்பால் கேட்டு அறிதல் வேண்டுமென்றும் அறிஞர் கூறுவர். எனினும், அறிவானுயர்ந்து அநுபவமிக்க லய ஞான விற்பன்னர்கள் அத்தாளங்களைக் கைகளில் போட்டுக் காட்டும் வகையை ஒருவாறு விவரித்திருக்கின்றனர். நிச்சாருகதாளம், தாளத்திற்குரிய தசப்பிராணன்களுள் நான்காவதாகிய அங்கத்தைத் தெளிவாக்குகின்றது.

(2) இரண்டாவது. இத்தலத்திற்குரிய மற்றொரு திருப்புகழ் "மைச்சரோருக நச்சுவாள் விழி" என்னும் தலைப்பை யுடையது. இத்திருப்புகழ் தாளத்தின் முதற் பிராணனாகிய 'காலத்தைக்' காட்டுகின்றது.

(3) மூன்றாவது. திருவண்ணாமலைத் திருப்புகழில் "நாவேறு பாமணத்த" என்னும் பாடலில் பன்னிரண்டு அக்கரமாகிய 'புலுதம்' எனும் அங்கப் பிரஸ்தாரம் குறிக்கப் பெற்றிருக்கிறது. இப் புலுதம், அங்கப்பிரஸ்தாரத்தில் 2048-ல் 666 ஆம் பேதமாகின்றது. பிரஸ்தாரம் என்பது, தாள தசப்பிராணத்தின் பத்தாவது எண்.

(4) நான்காவது. "முகத்தைப் பிலுக்கி" என்னும் முதலடி யுடைய திருப்புகழில் ஐந்தாவது தாளப் பிராணனாகிய "கிரகம்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

(5) ஐந்தாவது. "கமல மொட்டைக் கட்டழித்து" என்ற தலைப்பையுடைய அண்ணாமலைத் திருப்புகழில் மிஸ்ரஜாதி அட தாளம் குறிப்பிட்டிருக்கிறது. மிஸ்ரஜாதி அடதாளம் பதினெட்டு அக்கரகாலத்தை யுடையது.

(6) ஆறுவது. "கருவி னுருவாகி வந்து" என்னும் கலைப் பையுடைய திருப்புகழ்ப் பாடலில், திருப்புகழ்க்குரிய ஆறங்க மாகிய தாளமானது ஜனன மரணத்தைக் குறிக்கின்றது. இன்னும் விரிக்கிற் பெருகும். தாள தசப்பிரமாணங்களுக்குரிய உதாரணங் களை திருப்புகழில் ஆங்காங்கு கண்டுகொள்க.

இங்ஙனம் தாளத்திற்குரிய பத்துவகை உயிர்களைத் திருப் புகழ் ஆசிரியர் ஸ்ரீ அருணகிரிநாதர் தமது திருப்புகழ்ப் பாடல்க ளில் ஆங்காங்கு அமைத்துப் பாடியதுமன்றி,

"கைச்சதி யிருமுறை விதித்தவா முற்கடித
சச்சபுட சாசபுட சட்பிதா புத்திரக
கண்டச் சம்பதிப் பேதமாம் பல
கஞ்சப் பஞ்சதாள மாம்படி.

எனப் பூதவேதாள வகுப்பில், பஞ்சதாள லட்சணங்களையும் விவ ரித்துள்ளார்.

அகண்டமாக விரிந்திருக்கும் பிரஸ்தார தாளங்களை ஏகதா ளம் (ஏகம்=ஒன்று) தாளத்திரயம் (திரயம்=மூன்று) பஞ்சதாளம் (பஞ்சம்=ஐந்து) ஷட்தாளம் (ஷட்=ஆறு) சப்ததாளம் (சப்தம்= ஏழு) நவதாளம் (நவம்=ஒன்பது) அஷ்டோத்திர சததாளம் (அஷ் டோத்திர சதம்=நூற்றெட்டு) என்று ஓர் அளவு செய்து தென் னாட்டுச் சிவாலயங்களில் நிகழ்ந்து வரும் நித்திய நைமித்திகங்க ளுக்கு ஆகமங்களில் ஆதாரம் கூறப்பட்டுள்ளது. அவை - சிவால யங்களில் இன்ன பிரதிஷ்டைக்கு - இன்ன கிரியைக்கு - இன்ன பரிவாரத்திற்கு - இன்ன பலிக்கு - இன்ன உற்சவத்திற்கு - இன்ன பண், இன்ன தாளம், இன்ன கீதம், இன்ன வாத்தியம், இன்ன நிருத்தம், என்று ஓர் வரையறுத்துப் "பங்கஜப் பிரியா" என்ற தொடர்பினதான சுலோகங்களையுடைய சிவாகமங்கள் தெளிவு பெறக் கூறப்பட்டுள்ளன என்பன.

முதலாவது. ஏகதாளம் என்பது - 'பிரம்ம தாளம்' என்றும், 'ஆதி தாளம்' என்றும் பெயர் பெறும். இது சிவத்தினது பராபர நிலையை உணர்த்தும் பொருளென்பர்.

இரண்டாவது. தாளத்திரயம் என்பது—"ஐயொடு கிலியும் சவ்வுமாகும்" என்னும் மூன்றெழுத்தாகிய சத்தி பீஜத்தையும்; ஆத்தும தத்துவம்—வித்தியா தத்துவம்—சிவ தத்துவம் என்னும் தத்துவத்திரயத்தையும் உணர்த்துவது. (திரயம்=மூன்று)

திருந்து முத்திரைக டிக்குப ந்தனநீ
டருந்துயர் நீக்கு மந்திர சக்தி
தத்துவத் திரயந் தாளத் திரயம்
சுத்தா சமனம் தொடுமிடந் தொடுகை"

என்னும் சைவானுட்டானச் சமய விசேடமாகிய சரியை, கிரியைகளில் தாளத்திரயம் பேசப்படுவதையும் காண்க

மூன்றாவது. பஞ்சதாளம் என்பது—பரமன் பாசத்தின் இடமாகச் சிருஷ்டி, திதி, சங்காரம் செய்வதையும், பசுவினிடம் திரோபவானுக் கிரகம் புரிவதையும் உணர்த்தும் பஞ்ச மந்திரமும் ஆம்.

மகா கணபதி சகஸ்திரநாம மந்திரத்துள் "பஞ்சதாளாய நம:" என்ற மந்திரத் தொனிப்பதைக் கேட்டுத் தெளிக.

நான்காவது. ஷட்தாளம் என்பது — சடாங்க மந்திரத்தை யுணர்த்துவது.

ஐந்தாவது. சப்ததாளம் என்பது—சப்த கோடி மகா மந்திரத்தை யுணர்த்துவது.

ஆறுவது. நவதாளம் என்பது—மேற்குறிக்கப்பட்ட மந்திரங்களால் உபாசிக்கும் பொருளாகிய சிவத்தினது சிவம்—சத்தி விந்து நாதம் என்னும் அருதத்துவம் நான்கும், பிரமன் - விஷ்ணு - ருத்ரன் மகேஸ்வரன் என்னும் உருவ தத்துவம் நான்கும், சதாசிவம் என்

னும் அருவுருவ தத்துவம் ஒன்றுமாகிய நவதத்துவ சொரூபத்தை விளக்குவதனாலன்றோ? "நவதாள தத்துவ சொரூபாய நம" எனச் சிவமந்திரமும் தொனிக்கலாயிற்று. இத்தகைய மகுத்துவங்கள் தாளத்திற்கு இருப்பதனாலன்றோ! சிவப் பிரீதியின் நிமித்தம் தாளத்தைக் கைக்கொண்டாரை நெடுந்தூரத்தே கண்டு பணிந்து ஏகுமின்! நெருங்கன்மின்! நெருங்கின் நமக்குக் கேடுண்டாகும். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! என்று எமன் தன் ஏவலாளராகிய தூதுவர்கள்பாற் புகல்வதாக,

" கண்டுகொள் ளரியானைக் கனி வித்துப்
பண்டு நாஞ்செய்த பாழிமை கேட்டிரேற்
கொண்ட பாணி கொடுகட்டி தாளங்கைக்
கொண்ட தொண்டரைத் துன்னினுஞ் சூழலே"

என்று ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். ஆனதால், தாளம் கைக்கொண்டார் காலபாசம் கடந்தவர் என்பதும் பெறப்படுகின்றது. ஆகவே வேதத்திற்கு இசைந்த தாளம் பசுவாகும்; ஆகமத்திற்கு இசைந்த தாளம் பாலாகும்; அருட்பாவுக்கு இசைந்த தாளம் நெய்யாகும்; முச்சத்தியிசைந்த புயத்தையுடைய சேவற்கொடியோனை யாவரும் காணும்படி கிரியாயிருந்து கூவிக்காட்டிய தேசிகராகிய அருணகிரிநாதர் அரும் பாடலுக்கு இசைந்த தாளம் இன்சுவையாகும். ஆதலால், தாளம் என்பது சிவத்தொடு சம்பந்தப்படுவதால், சைவப்பொருளாகிய இந்தத் தாளவித்தையைக் கூறும் பரதகலை, சிவப்பிரீதியின் பொருட்டு உலகில் விளங்குமபடியாயிற்று.

மற்றும், சிவாலயங்கள்தோறும், பிரமசந்தி முதலிய நவசந்தி கவுத்துவங்கள், உற்சவ ஆரம்பத்திலும், துவஜா ரோகணத்தின் போதும், திக்குபந்தன காலத்திலும், உற்சவ சமயங்களிலும் உபயோகிக்கப்பெறும். (கவுத்துவம்=ஓர்வகை தாளஜாதி)

(1) பிரமசந்திக்குத் தாளம்—பிரமதாளம், இராகம் — மேக ராகம், நிருத்தம்—கமல நிருத்தம். கீதம்—மத்தியமாவதி வாத்தியம்—சச்சத்புடம்.

(2) இந்திரசந்திக்கு - சமதாளம், காந்தாரராகம், புஜங்க லளித நிருத்தம், கூர்ஜரிகீதம். வாத்தியம்-சாசத்புடம்.

(3) அக்கினி சந்திக்கு - மத்தாபரண தாளம், கொல்லி ராகம், ஜானு நிருத்தம், நட்டராககீதம் வாத்தியம் - சிங்கலீலை.

(4) எமசந்திக்கு - பிருங்கிதாளம், கௌசிகராகம், தண்ட பாத நிருத்தம், தேசாக்ஷிகீதம், இலளித வாத்தியம்.

(5) நிருதிசந்திக்கு - மல்லதாளம், நட்டபாடைப் பிரிய ராகம், புஜங்கத்திராக நிருத்தம், குண்டலிகீதம், பிரதிமட்டிய வாத்தியம்.

(6) வருண சந்திக்கு - நவதாளம், வராளிராகம், குஞ்சித நிருத்தம், காமரகீதம், சிம்மநந்தன வாத்தியம்.

(7) வாயுசந்திக்கு - பலிதாளம், தக்கேசி ராகம், சாந்தி நிருத்தம், இராமகிரி கீதம், பஞ்ச வாத்தியம்.

(8) குபேர சந்திக்கு - கொட்டரிதாளம், மாளவ ஸ்ரீராகம், சந்தியாநிருத்தம் டக்கா கீதம், கந்தர்ப்ப வாத்தியம்.

(9) ஈசானசந்திக்கு - டக்கரீ தாளம், மலகரி ராகம், பிரமரீ நிருத்தம், ஆந்தாளிகீதம், அனுமகுப்ப வாத்தியம்.

# நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியரது இயற்பெயர் 'திருவம்பலம்' என்று தெரிகிறது. இவரது இயற்பெயரே இவர் சைவ சமயத்தவரென்பதைக் காட்டுகிறது. பஞ்சபூத ஸ்தலங்களில் ஐந்தாவது எண்ணையுடையது சிதம்பரம். அத்திருத்தலத்துத் திருக்கோயிலில் அழகிய பொன்னம்பலத்தில் திருக்கூத்தாடுகின்றவர் ஆனந்த நடராஜர். பொன்னம்பலத்திற்குத "திருவம்பலம்" என்ற பெயரும் உண்டு. அப்பெயரைப் புலவர் தம்பெயராகக் கொண்டிருப்பதனால், அவரைச் சைவ சமயத்தர் எனப்பட்டது. பிறப்பகம் கொங்கேழ் சிவஸ்தலங்களில் ஓர் எண்ணையுடையதும், முதலையுண்ட பாலனை மூவாண்டுக்குப் பின்னர் வன்றொண்டராகிய ஸ்ரீ. சுந்தரமூர்த்தி சுவாமிகளால் தேவாரத் திருப்பண்ணோதி அழைத்ததுமான திருஅவிநாசிக்கு வடகிழக்கில் சுமார் எட்டுக்கல் தூரத்திலுள்ள "பெருமாநல்லூர்" என்னும் பெயரியது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் மூதறிஞராகிய திருவம்பலனார், இவ்வுலக வாழ்வை நீத்து இற்றைக்குச் சற்றேறக்குறைய நூறாண்டாயிற்று. இப்புலவரது கால்வழியினர் கொங்குநாட்டைச் சார்ந்த சிற்றூர் பேறூர்களிலிருந்து வருகின்றனர்களென்றும், அவர்களுள் ஒரு சிலர் மட்டும் திருவம்பலனாரது ஆடலாசிரியத் தொழிலைப் பயின்று சிவாலயங்களில் சிவபெருமானுக்கு உபசாரம் புரிந்து வருகின்றனர்களென்றும் கேள்விப்படுகிறேன்.

செந்தமிழிலும், வடமொழியிலும், ஆந்திர பாஷையிலும் சிறந்த புலமை வாய்ந்த திருவம்பலனார், யாப்பிலக்கண விதிவழுவாமல், பல்விதப் பாவினங்களில் இனிமை தவழவும், அழகு பொலியவும், பயன்கூடியதுமான சில தமிழ் நூல்கள் இயற்றிப்

பெயர் பெற்று விளங்கியிருந்தனரென்று பல்லோராலும் பரக்கக் கூறப்படுகின்றன. அவற்றுள் "இந்நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பாவும்" "நூற்றெட்டுத்தாள வெண்பா அந்தாதியும்" அடங்கியனவாம். நாட்டிய மாதர்கட்கும், நாட்டியங் கற்பதையே தொழிலாகவுடைய ஆடலாசிரியர்கட்கும், ஆடல் பாடல் அபிநயங் களைக் கற்பிப்பதில் இவர் திறமை வாய்ந்தவர் எனக்கூறப்படுகிறது. இவ்வாசிரியரிடத்து ஆடல் பாடல் அபிநயங்களைக் கற்று அரசர்க ளிடத்தும், பிரபுக்கள்பாலும் பலதிறப்பட்ட வெகுமதிகள் பெற்ற மாணவ மாணவிகள் பலர், கொங்குநாட்டுச் சத்தியமங்கலம், கோபி செட்டிபாளையம், பல்லடம் ஆகிய தாலூகாக்களில் இருந்தனரென்ப. இசைப் புலமையிலும், பரத நாட்டியத்திலும் திருவம்பலனர் ஓர் பெரியாரெனப் பெயர் விளங்கியிருந்ததுபோலவே, இசையிலும், நாட்டியத்திலும் வல்ல புலவர்களுடன், இசை, தாளம், நாட்டியம் முதலியனபற்றித் திறமையாக வாதம் புரிவதிலும் வல்லவராக விருந்தனரென்ப. திருவம்பலனர் ஆடலாசிரியப் புலமையில் கொங்குநாட்டில் ஓர் தனிச்சிறப்பும் கௌரவமும் பெற்றிருந்தா ரெனப் புலவாது சமகாலத்தில் வாழ்ந்திருந்த சங்கித ரசிகர்கள் சிலரும், தமிழ்ப் புலமை வல்லார் சிலரும் சிறப்பித்துக் கூறியிருக் கின்றனர். அம்மட்டோ! திருவம்பலனர் பலர் குழுமிய பேரரங் கில் ஆடல்புரியும் அரிவையரைப் போலவே தாமும் ஜெஜார் பூண்டு, ஆடையுடுத்து, தலைக்கோலமணிந்து, காலில் சதங்கை கட்டி நாட்டி யமபுரிவதில் மிகச் சமர்த்தரென்றும் பல்லோர் உரைக்கக் கேட் டுளேன். அங்ஙனம் உரைத்தவர்களுள் சத்தியமங்கலம் நாட்டிய வல்லாள் அபிநயம் ஸ்ரீமதி, குட்டியம்மாள் என்ற விதூஷியும் ஒருத்தி. இக்காலத்தில் இந்திய நாட்டியத்தில் உலகெங்கும் பெரும் புகழ்தாங்கி, ஜயக்கொடி நாட்டிவரும் ஸ்ரீ உதய சங்கரரைப் போல வே திருவம்பலப்புலவர் அக்காலத்தில் கொங்குநாட்டிலும், மைசூர் ராஜ்யத்திலும் "நாட்டிய வல்லார்" எனப் பெயர் சிறந்திருந்தனர்.

இந்நூலார், தாள தசப்பிராணன்களில் எட்டாவதாகிய 'லயம்' என்னும் தாள இயல்புகளைப்பற்றி நுனித்துக்கூறியிருக்கும் அரிய இனிய செய்திகளைக் கவனித்தால், இவ்வாசிரியர் தாள சம்பந்தமான நூல்களை ஐயம், திரிபு அறக் கற்றுத் தெளிந்தவரென்பதும், அங்ஙனம் கற்றுத் தெளிந்தவற்றைக் கைவினை முறையாலும், செய்வினைச் செயலாலும் பழகிக் கைதேர்ந்து அநுபவ முதிர்ந்த பெரியாரென்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காணலாம். பரோபகாரச் செயலுடைய இவ்வாட்டலாசிரியர், "தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேண்டும்" என்ற விருப்பம் உடையவராயிருந்ததனால், தாம் அரிதிற் கற்றுணர்ந்த அரிய விஷயங்களைத் தமிழுலகமும் உணர்ந்து அளப்பரிய அதன் அருமை பெருமைகளுக்கு மிக வியந்து இன்பம் அடையவேண்டுமென்ற எண்ணங்கொண்டு, "அகத்திய பரதம்," "பஞ்ச மரபு" முதலிய இசை நூல்களிற் காணப்படும் தாளப் பகுதிகளையும், ஆந்திரம், வடமொழிகளில் காணப்பெற்ற பத்திய கத்தியங்களையும் ஆதாரமாகக் கொண்டு "நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா," "நூற்றெட்டு மாத்திரைத் தாள வெண்பா வந்தாதி" என்ற இரு நூல்களையும் இயற்றி யருளினர்.

இவ்விரு நூல்களும் மார்க்க தாளமாகிய நூற்றெட்டுத் தாளங்களின் பெயர்களையும், அவற்றின் மாத்திரைகள் அங்கங்கள் அளவு முதலிய இலக்கணங்களையும் விளக்கமாகக் கூறுகின்றன.

இவ்வளவே இந்நூலாசிரியரைப் பற்றி இப்பொழுது என்னால் அறியப்பட்டவை.

சி. கு. நா.

## மாத்திரை.

---

இதன் தோற்றம் அல்லது அளவு கண்ணடிப் பொழுதும், கைந்நொடிப் பொழுதும் என்றுகூறுவர். இதனை, தேசியம், மார்க்கம் என இருவகைத் தாளங்களுக்கும், அவற்றிற்கு அளவுபடுத்திக் கூறிய அங்கங்களுக்கும் ஏற்ப உபயோகித்தல் முறை. அரை மாத்திரையுடைய 'ஏகதாள' முதலாகப் பதினாறு மாத்திரையுடைய 'பார்வதிலோசனம்' ஈருகச் சொன்ன நாற்பத்தியொரு தாளங்களுக்கும், அவையொட்டிய நூற்றியெட்டு, நூற்றுப்பதினொன்று, நூற்றியெழுபத்தைந்து தாளங்களுக்கும் மாத்திரைகளை, இசைப் பாடகர்களும், லயஞான விற்பன்னர்களும் அளவறிந்து வரையறுக்கப்பட்ட விதிகளுக்கடங்கி உபயோசித்துச் சிரவணிப்பவர்களை இன்புறுத்தி வந்தனர். தேசீய தாளங்களுக்கென அமைந்த மாத்திரைகளின் அளவைவிட மார்க்க தாளங்களுக்கமைக்கப்பட்ட மாத்திரை, பதினாறு எண்கள் வரை உயர்ந்து காணும். காரணம் அத்தாளங்களுக்குரிய அங்கங்கள் மிகுதிப்பட்டதனாலென்க. தேசீய தாளத்திற்கு அநுத்ருதம் - த்ருதம் - லகு ஆகிய மூன்று அங்கங்களே முப்பத்தைந்து தாளங்களுக்கு உபயோகப்படுவன. மார்க்க தாளத்திற்கு மேற்குறித்த மூன்று அங்கங்களுடன், திருதவிராமம், அதாவது மதிவடிவமுடைய திருதத்திற்கு மேல் ஒரு அநுதிருதத்தை அதாவது பிறைக்குறியை வைபபது. அது மூன்றக்கார காலத்தைக்கொண்டது. இவற்றுடன வில்வடிவாகிய குருவும், வளைந்த பாம்பு வடிவுடைய பலுதமும், புள்ளடி உருவங் கொண்ட காகபாதமும் ஆக ஏழு அங்கங்கள் உபயோகப்படுத்தப் பெறும். இவற்றைச் 'சப்தாங்கம்' என்று கூறுவர்.

இவ்வேழு அங்கங்களையும், தாளரூபமாகக் கைகளில் உபயோகிக்கும் விதமாவது :—

(1) விராமம் என்பது அநுத்ருதம். அதாவது பிறை - இதனை உபயோகிக்கும் விதம், அகலத்திறந்த இடது உள்ளங்கையில், வலக்கை நான்குவிரல்களையும் சேர்த்து வளைத்து ஒற்றுதல்.

த்ருதம் என்பது பிறை.

(2) ஒற்றின கையை மேலே நான்கு அங்குலம் தூக்குதல்.

(3) திருதவிராமம் என்பது மதிமேற் பிறை. தூக்கிய கையை நான்கு அங்குலம் எதிரே வீசுறுதல்.

(4) லகு என்பது கணைவடிவம்.
வலக்கையை எட்டு அங்குலம் தூக்கித்தட்டுதல்.

(5) குரு என்பது வளைந்த வில்லுருவம்.
தட்டின கையை எட்டு அங்குலம் கீழே இறக்குதல்.

(6) புலுதம் என்பது சுருண்ட பாம்பு ரூபம்.
தட்டின கையை எட்டு அங்குலம் சுழித்து, எட்டு அங்குலம் கீழே இறக்குதல்.

(7) காகபாதம் என்பது - புள்ளடி வடிவம்.
வலக்கையை எட்டு அங்குலம் முறையாக ஒரே அளவில் இடம்-வலம்-மேல்-கீழ் ஆகிய நான்கு திசைகளிலும் வீசிக்காட்டுதல்.

மேற்குறித்த விதமாக நூற்றெட்டுத் தாளங்களைக் கைகளில் போட்டுத் தாள வர்ணங்களை வாயில் பாடுதலும், துளைக்கருவி, நரம்புக்கருவிகளில் இசைத்துக் காட்டுதலும், மத்தளம், தவில், முதலிய தோற்கருவிகளில் ஜதிமுறைகளை வாசித்துக்காட்டுதலும் முறையாக இசை லயங்களைப் பயின்ற வித்வான்களது செயல்கள்.

## நூற்றெட்டுத் தாளங்களுக்குரிய எட்டுக் கணங்களும், அவற்றின் பயன்களும்.

——::——

கணங்கள் என்பதற்குத் திரட்சி அல்லது கூட்டங்கள் என்று பெயர். இக்கணங்கள் எட்டுவித முடையன. அவை—மகணம்—பகணம்—ஜகணம்—நகணம்—யகணம்—ரகணம்—தகணம் என்பன. இவற்றிற்கு ஆதாரச் சுலோகமும் உள்ளன. "**தாளசமுத்திரம்**" எனப் பெயரிய தமிழ் நூலில் நான்கு வெண்பாக்களில் கணங்களின் அங்க உருவங்களைத் தெளிவாகக் காட்டப்பெற்றிருக்கின்றன. விரிவஞ்சி இரண்டு வெண்பாக்களை மட்டும் இதன் கீழ்க் குறித்துள்ளேன். அவை:—

### வெண்பா.

"பகணமே யாதிகுரு பான்மதியந் தெய்வம்
புகழ் பலவு நல்லபுகழ்—மகணம்
நிலையாகு மூன்றுகுரு நீணிலமே தெய்வந்
துலையாத செல்வமெனச் சொல்." (32)

"முன்னமொழி யெண்கணமு மூன்றுறப்பா லொவ்வொன்றும்
மன்னு லகுகுருவே வைப்பாகும்—இந்நிலத்தில்
வல்லபல தாளத்து வாத்யகீ தப்பிரபந்தஞ்
சொல்லு முதற்கணமே சூட்டு" என்பன.

(1) பகணம்—இதன் அங்கம் ஒரு குரு இரண்டு லகு. அதிதேவதை சந்திரன், பதினாறு அக்கரங்களையுடையது. 811

(2) மகணம்—இதன் அங்கம் மூன்றுகுரு. அதிதேவதை பூமி. இருபத்திநான்கு அக்கரங்களையுடையது. 888

(3) யகணம்—இதன் அங்கம் ஒருலகு இரண்டுகுரு. அதிதேவதை நீர், இருபது அக்கரமுடையது. 188

(4) நகணம்—இதன் அங்கம் மூன்று லகு. அதிதேவதை சுவர்க்கம். பன்னிரண்டு அக்கரங்களையுடையது. 111

(5) ஜகணம்—இதன் அங்கம் ஒரு லகு, ஒரு குரு, ஒரு லகு. அதிதேவதை சூரியன். பதினாறு அக்கரங்களையுடையது. 181

(6) சகணம்—இதன் அங்கம் இரண்டு லகு, ஒரு குரு. அதிதேவதை காற்று. பதினாறு அக்கரங்களையுடையது. 118

(7) ரகணம்—இதன் அங்கம் ஒரு குரு, ஒரு லகு, ஒரு குரு. அதிதேவதை தீ. இருபது அக்கரங்களையுடையது. 818

(8) தகணம்—இதன் அங்கம் ஒரு குரு, இரண்டு லகு. அதிதேவதை ஆகாயம், பதினாறு அக்கரங்களையுடையது. 811

## நூற்றெட்டுத் தாளங்களுக்குரிய விவரம்.

ச - ரி - க - ம - ப - த - நி என்னும் வடமொழி ஏழு ஸ்வரங்களுக்குத் தமிழில் குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி - தாரம் என்பன பெயர்கள். இந்தச்சப்த ஸ்வரங்களில் ச, ம, ப, என்கிற ஸ்வரங்களுக்கும், மற்றைய ரி, க, த, நி என்னும் நான்கு ஸ்வரங்களுக்கும் முதன்மையுடையனவாகவும், தங்கள் பாதுகாப்புக்களுக்காகவுமே யுள்ளன வென்பதைக் காட்டுவது போல் தாளத்திற்குரிய ஏழு அங்கங்களில் அநுத்ருதம் - த்ருதம் - லகு என்னும் மூன்று அங்கங்கள் முப்பத்தைந்து தாளங்களுக்கு முதன்மையாக வமைந்தும், கிரியாங்கமாகிய இம்மூன்றுடன் குரு - புலுதம் - காகபாதம் என்ற மூன்றும் கூடி "ஷடாங்கம்"

என்று பெயர் பெற்று விளங்குதற்காயிற்று. இவற்ருல், நாம் அறிந்துகொள்வது யாதெனின், அநுத்ருதம் - த்ருதம் - லகு என்னும் மூன்று அங்கங்களால் முப்பத்தைந்து தாளங்களும்; ஆறு அங்கங்களால் நூற்றெட்டுத்தாளங்கள் — நூற்றுப்பதினெரு தாளங்கள் — நூற்று எழுபத்தைந்து தாளங்களும்; பஞ்சதாளம் - சப்ததாளம் - நாற்பதுதாளம் என்பனவும் ஏற்பட்டனவென்பதே. இங்ஙனம் ஏற்பட்ட இம்மார்க்க தாளங்கள் பதினறு அக்கர காலங்களை முதன்மையாகக்கொண்டு தாள ஜதி நடைகளையும்; ஸ்வர நடைகளையும்; தம்முள் அமைந்து விளங்குமாறு திகழ்கின்றன. இங்ஙனம் ஆறு அங்கங்களையும், மற்றும், திருவிராமம், லகுவிராமம், லகுவிராமசேகரம், குரு, புலுதம், காகபாதங்களும், இவற்றிற்குரிய திருதவிராமமும், விராமசேகரங்களும் கூடியதே நூற்றெட்டுத் தாளங்களாம்.

பதினறு அங்கங்களின் உட்பிரிவுகளுள், சப்தாங்கமும் (ஏழு) ஷடாங்கமும் (ஆறு) திரியாங்கமும் (மூன்று) அடங்கியதெனக் கூறப்படுகின்றது. அநுத்ருதம்-த்ருதம்-திருதவிராமம், லகு, குரு, புலுதம், காகபாதம் என்னும் ஏழு உறுப்புக்களே 'சப்தாங்கம்' எனப் பெயர் பெறும். இவ்வேழில், திருதவிராமத்தை விலக்கிஞல், 'ஷடாங்கம்' என்றும், குரு, புலுதம், காகபாதம் என்ற மூன்று அங்கங்களையும் நீக்கிஞல், எஞ்சிய அநுத்ருதம்-த்ருதம்-லகு என்ற மூன்றும், 'திரியாங்கம்' எனவும் பெயர் பெறும்.

இம் முப்பிரிவே அநேக தாளங்களைப் பெருக்குவதற்கு ஆதார அங்கங்களாம்.

காகபாதப் பிரஸ்தாரத்திஞல், இருபத்தியோராயிரத்து இருநூற்றி இருபத்தியேழு (21227) பேதங்களும்; லட்சத்து ஆருயிரத்து முன்னூற்று முப்பத்திரண்டு (106332) அநுத்ருதங்களும்; ஐயாயிரத்து நூற்றி என்பத்துமூன்று (5183) திருதங்களும்;

இருபத்தி ஐயாயிரத்து நூற்றியெழுபத்தாறு (25176) திருதவிராமங்களும்; பன்னிரண்டாயிரத்து நூற்றி எழுபத்தியேழு (12177) லகுக்களும்; அறுநூற்றிமுப்பது (630) குருக்களும், இருபத்தியெட்டுப் (28) புலுதங்களும்; ஒரு காகபாதமும் உண்டாகின்றன. இவற்றையெல்லாம் மொத்தமாகச் சேர்த்துக் கணக்கிட்டால், அங்கங்கள் மட்டும் லட்சத்துத் தொண்ணூற்றுறுயிரத்து நூற்றியெண்பது ஆகின்றன. இவற்றுல் சப்தாங்கங்களில் ஒவ்வொரு உறுபுக்கும் ஏற்படுகிற பிரஸ்தாரங்களும், பிற விவரங்களும் இன்னதென அறியப்பட்டன.

இங்ஙனம் ஒவ்வொரு அங்கங்களும், பிரஸ்தாரம் செய்யப்பெற்று ஒன்றுக்கொன்று கலந்து மாறுதல் ஏற்படுவதனுல் கணக்கற்ற தாளங்கள் ஏற்படுவதற்கு ஏதுவாகிறது. இப்பிரஸ்தாரங்களினுல் தாளங்களின் எண்ணிக்கைகள் பெருகி, இப்பெருக்கத்தினின்றே நூற்றெட்டு (108) நூற்றிப் பதினென்று (111) நூற்றியெழுபத்தைந்து (175) முதலிய தாளங்கள் தோன்றி. அத்தாளங்களுக்குப் பெயர்களும்; அங்கங்களும்; மாத்திரைகளும் ஏற்பட்டு, அவற்றை லயஞானப் பிரியர்களும் இசையறி புலவர்களும் இனிது அறிந்து உபயோகித்தற்பொருட்டு வடமொழிப் புலவர்கள், அவற்றைச் சுலோகங்களாகச் செய்து அவற்றிற்கு வடமொழிகளில் 'தாளார்ணவம்' 'பரதகல்ப லதாமஞ்சரி' 'காயக லோசனம்' 'சங்கீத ரத்னுகரம்' என்று நூற்பெயர்களிட்டும் வழங்கினுர்கள். அவர்கட்கு முன்னரேயே தமிழ்வல்ல புலவர் பெருமக்கள் அகவற்பா, கலிப்பா, கலிவெண்பா, வெண்பா, கலித்துறை, அந்தாதி, விருத்தம் முதலிய பாவினங்களில் அழகுபெறப்பாடி, தாளவகையோத்து, தாளசமுத்திரம், நூற்றெட்டுத்தாளக் கலிவெண்பா, நூற்றெட்டுத்தாளவெண்பா வந்தாதி, நூற்றெட்டுத்தாளக் கலித்துறை, என்பனவாதிய பெயர்களிட்டு வழங்கினர்.

இத்தாளங்கள் அநுட்டானத்தில் எளிதாகச்செய்து காட்டக் கூடியவைகளாயிருக்கவில்லை யென்பது அவைகளுக்கு அமைந் துள்ள அங்கங்களைக் கவனிக்கும்போது புலனாகும்.

மார்க்கதாளமாகிய இந்நூற்றெட்டுத் தாளங்களுக்கு அநேக அங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளை நினைவிலிருத்தி, இசையில் லயத்தைப் பொருத்தித் திருட்டாந்தப்படுத்திக் காட்டு வது சிரமசாத்தியமான காரியம். இவற்றைக் கவனிக்கும்போது, லயஞான - சுரஞான விற்பன்னர்கள் அவற்றைத் துவக்கினார்கள்; நிலைநிறுத்தினார்கள் என்று கூறுவது வியக்கக்கூடியனவாயுள்ளன. இவைகொண்டே நூற்றெட்டுத் தாளங்கள் உபயோகத்தினின் றும் அருகிவிட்டதென்று கூறுவது மிகையாகா.

சப்தாங்கப் பிரஸ்தாரத்தினால் ஏற்பட்ட நூற்றிருபது தாளங் களுக்குச் 'சாரங்க தேவர்' எனும் சங்கீத வித்துவமணி தமது "சங்கீத ரத்னாகரம்" என்னும் வடமொழி நூலில், திருதவிரா மம், என்னும் அங்கத்தையே விலக்கி தாளங்களுக்கு அங்கங்களை அமைத்திருக்கின்றனர். இதனைக் கவனிக்கும்போது, அவர் ஷடாங்கத்தையே ஆதாரமாகக் கொண்டிருந்தாரென்று புலனா கின்றது. இச்சாரங்க தேவர்தான் இவ்வாறென்றால், நூற்றெட் டுத்தாளத்தை இயற்றிய லயஞானப் புலவரும் திருதவிராமத்தை விலக்கியே தாளங்களுக்கு அங்கங்களை அமைத்திருக்கின்றனர். இவைகளைக் கவனிக்கும்போது, அநுத்ருதம்-த்ருதம் என்னும் அங்கம் இரண்டும், மூன்று அக்கரகால உச்சரிப்புடன் கூடிய தாயும், இம்மூன்று அக்கரங்களையே திருதவிராம அங்கமாகக் கொண்டிருப்பதனாலும்; அநுட்டானத்திலும் அவ்வகையாகவே இருப்பதனாலும் அத்திருத விராமத்தை விலக்கி ஷடாங்கமாகவே கணக்கிட்டுப் பிரஸ்தரிக்கத் துணிந்தனர் போலும்! இவ்வகையில்

ஷடாங்கத்தையும், சப்தாங்கத்தையும் அப்புலவர்கள் ஒன்ருகவே கருதியிருப்பதாக அறியப்படுகிறது.

பிரஸ்தாரங்களாலுண்டான மார்க்க தாளங்கள் யாவும் சாமானியர்களால், எளிதாகவறிந்து அநுட்டிக்கக்கூடிய தன்ருயினும், அத்தாளங்கள், சாத்திரத்தையும், இசைபாடும் புலவர்கள் ஒப்பற்ற திறமையையும், அநுபவ ஞானத்தையும் கொண்டவைகளாய் இருப்பவைளானதால், அவற்றை லயஞான விற்பன்னர்கள் நுணித்துணர்ந்து, தங்கள் அரிய திறமையை உபயோகித்து பண்டைய வித்துவான்கள் அநுபவத்தில் அறிஞர்கள் சபாஷ் என வியந்து பாராட்டுமாறு புகழ்பெற விளங்கியிருந்ததுபோலத் தாங்களும் அப்புகழ்பெற்று விளங்குவதற்குப் பெரிதும் முயற்சிப்பது அறிவுடைடமாமென்பதைச் சிந்திக்க வேண்டுகிரும்.

# நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா.

———:———

## காப்பு.

நேரிசை வெண்பா.

சீர்மருவு நூற்றெட்டாச் செப்புகின்ற மாத்திரையைப்
பார்கலிவெண் பாவினாற் பாடினான்—பேர்மருவு
தூயபெரு மாநல்லூர்த் தோன்றுதிரு வம்பலவன்
நேயக் கணபதிதாள் நேர்ந்து.

———❀———

## நூல்.

‡ சச்சபுடம்.

(1) சச்சப் புடமிரண்டு வில்கோலுஞ் சார்புலுதம்
இச்சையுடன் மாத்திரையு மெட்டாகு—மெச்சவரு

‡ சாசபுடம்.

(2) சாசபுட மோர்குருவாஞ் சாரும் லகுவிரண்டு
மாசுகுரு வொன்றுறு மாத்திரையாம்—வீசுபுகழ்

---

1. அங்கம் 881 ஒரு புலுதம் ஆக நான்கு. (மாத்திரை 8)
வில்=குரு. கோல்=லகு.

2. அங்கம் 8118 ஆக நான்கு. (மா. 6)
மாசுகுருவென்பது - மா=மகத்துவம். சு = நிருமலம்.
இவ்விரண்டுங்கூட மகத்துவ சுத்த சற்குரு
என்று பொருளாகின்றது.

‡ சற்பிதா புத்திரகம்.

(3) சற்பிதா வோர்புலுதம் சாரும் லகுகுரு கோல்
சொற்குருவு நற்புலுதம் சொல்பனிரெண்—டிப்புவியில்

‡ சம்பொற்கட்டம்.

(4) சம்பொற்கட் டம்புலுதம் சாருங் குருமூன்று
மின்பமுயிர் மாத்திரையு மீராறே—தம்பமெனும்

‡ உத்கடிதம்.

(5) உத்கட் டிதத்துக் கொருமூன்று வக்கிரந்
தக்கபுகழ் மாத்திரை தாறாறும்—ஒக்குமே

---

3. அங்கம் ஒரு புலுதம் 1818 மற்றொரு புலுதம். (மா. 12)

4. அங்சம் ஒரு புலுதம் 888 மற்றொரு புலுதம் ஆக ஐந்து. (மா. 12)

உயிர்=புலுதம்.

5. அங்கம் 888 ஆக மூன்று. (மா. 6)

வக்கிரம்—குரு

‡ இக்குறிச்ளிட்ட

சச்சபுடம் முதல் உத்கடிதம் ஈறாகவுள்ள ஐந்து தாளங்களும் ‘ பஞ்ச தாளங்கள் ’ எனப் பெயர் பெறும். இவ்வைந்தும் சதாவ மூர்த்தியின் ஐம்முகங்களில், வாமமுகத்தில் சச்சபுடமும் ; சத்தியோஜாதத்தில் சாசபுடமும் ; அகோரத்தில் சற்பிதா புத்திரகமும் ; தற்புருடத்தில் சம்பொற்கட்டமும் ; ஈசானத்தில் உத்கடிதமும் தோன்றினவென்பது பரதமதம். இவற்றிற்கு உபதாளங்ஙள் ஐந்தென்ப. அவை :— ஆதிதாளம், பார்வதி லோசனம், குடுக்கம், சிக்கணந்தம், திரிமாத்திரை என்பன. வேறு சிலர், உபதாளங்கள் ஆறு என்பர். அவை :— அங்கம், உபாங்கம், பங்கம், விபாங்கம், சுத்தம், அனுதாளம் என்பன. மற்றுஞ் சிலர், நவதாளம் என்றுங் கூறுவர். அவை :— அருமை, சமம், சித்திரம், நிவர்த்தம், துருவம், சயம், படிமம், விடம், அரிதாளம் என்பன. பின்னுஞ் சிலர், இவைகள் சச்சபுட முதல் பெத்தாபரணம் ஈறாகவுள்ள நூற்றெட்டுத் தாளங்களுள் அடங்கியதென்பர்.

ஆதிதாளம்.

(6) ஆதிதா ளந்தனக்கே யாகு மொருலகுவாம்
ஓதுபுகழ் மாத்திரை யொன்றாகும்—மாதுவளர்

தர்ப்பணம்.

(7) தற்பணந் தானதற்குச் சாரு மிருசுழிவில்
முற்பயிலு மாத்திரை மூன்றாகும்—நற்புகழ்சொல்

சச்சரி.

(8) சச்சரியி ரண்டுசுழி சார்விந்தம் யெட்டுமுறை
வச்சமுறை யீரொன்பான் மாத்திரையும்—இச்சையுடன்

சிங்கலீலே.

(9) சிங்கலீ லேக்கொருகோல் சேர்சுழி மூன்றொருகோல்
மங்கலில்லா மூன்றரை மாத்திரையாந்—துங்கமிகும்,

---

6- அங்கம் 1. (மா. 1)

7. அஙகம் 008 ஆக மூன்று. (மா. 3)

சுழி — திருதம்.

8. அங்கம் ooulooulooulooulooulooulooulooul ஆக 8. (மா. 18)

விந்து — விராமம். அம்பு — லகு.

9. அங்கம் 10001 ஆக 5. (மா. $3\frac{1}{2}$)

முக்கிய குறிப்பு :—தெலுங்கு, சம்ஸ்கிருதம், தமிழ் முதலிய மொழிகளில் அச்சேறியும், அச்சேறாமலுமிருக்கும் நூற்றெட்டுத் தாள நூல்களுள் சில ஆதிதாளத்தை முதலாகக்கொண்டும், சில சச்சபுட தாளத்தை முதலாகக்கொண்டும் இருக்கின்றன. இவ்வாறு தாள நூல்கள் மாறுபட்டிருப்பதற்குரிய சரியான காரணத்தை அறியக்கூடவில்லை.

கந்தர்ப்பனம்.

(10) கந்தர்ப் பனத்துக்குக் காணு மிருசுழிகோல்
வந்த குருவிரண்டா மாத்திரையா— றுந்துகதிச்

சிங்கங்க்கிரமம்.

(11) சிங்கவிக்ர மந்தானுஞ் சேர்குருமூன் றோர்லகுவும்
பங்குயிர்வில் கோல்புளுதம் பார்பதினு—றிங்கிதமாஞ்

சீரங்கதாளம்.

(12) சீரங்க மீரிலகு சேர்குருவுங் கோல்புளுத
மேர்வங்கொள் மாத்திரையு மெட்டாகும்—பார்தங்

இரதிலீலை.

(13) கிரதிலீலைக் குக்கோ லிரண்டு குருவு
மிரண்டுபுகழ் மாத்ரை யிருமூன்—றரசுபுகழ்

ஆரங்கம்.

(14) ஆரங்க நாலுசுழி யாகுங் குருவொன்று
வாரங்கொள் ளீரிரண்டு மாத்திரையே—பார

பரிக்கிரமம்.

(15) பரிக்கிரமங் கொம்பிரண்டு பைங்கோ லிரண்டோர்
குருக்கிரம மாத்திரையுங் கூறஞ்—சுருக்கும்

---

10. அங்கம் 188 ஆக 3 (மா. 6)

11 அங்கம் 8881 ஒரு புளுதம் 81 மற்றொரு புளுதம் ஆக 8. (மா. 16)

12. அங்கம் 1181 ஒரு புளுதம் ஆக 5 (மா. 8)

13. அஙகம் 1188 ஆக 4 (மா. 6)

14. அங்கம் 00008 ஆக 5 (மா. 4)

15 அங்கம் 00118 ஆக 5 (மா. 5)

கொம்பு = திருதம்.

பிரத்தியாங்கம்.

(16) பிரத்தியாங்கம் வில்விரண்டு பேணோ ரிலகு
குருக்கீற்று மாத்திரைக் கூறெட்—டுருச்சீர்

கசலீலை.

(17) கசலீலை முக்கோலோர் கோல்சே கரமு
ரைசெய்மாத் ரையுநா லேகா—லிசையுங்

திரிபின்னம்

(18) திரிபின்ன மோரிலகு சீர்வில் புலுத
மருமையுறு மாத்திரையு மாறும்—பெருமைபெறு

வீரவிக்ரமம்.

(19) வீரவிக்ர மம்மிருகோல் விந்துகமி ரண்டொருவில்
லாரருள்சேர் மாத்திரைக ளஞ்சாகும்—பாரினிய

அன்னலீலை.

(20) அன்னலீ லைக்குலகு சேகர மாமிரண்டே
இன்னியல்சீர் மாத்ரை யிரண்டரையே—வர்னபின்னம்

---

16. அங்கம் 88181 ஆக 5. (மா. 8)
கீற்று=லகு.

17. அங்கம் 111 ஒரு லகுசேகரம் ஆக 4. (மா. 4¼)
கோல்சேகரம்=லகுவிராமம்.

18 அங்கம் 18 ஒரு புலுதம் ஆக 3 (மா. 6)

19. அங்கம் 11008 ஆக 5 (மா. 5)
விந்துகம்=திருதம்.

20. அங்கம் இரண்டு லகுசேகரம். ஆக 2 (மா. 2½)

வர்ன பின்னம்.

(21) நற்சுழி யிரண்டேநேர் நாட்டுகுரு வொன்றிதுதான்
உற்றவியல் மாத்திரையு மோர்நான்கே—முற்றவுயர்

இராஜசூடாமணி.

(22) ராஜசூ டாமணி யிணைத்திருதங் கோல்மூன்று
நேசமிரு கண்கோலு நீள்கலைபெட்—டாசில்

அரங்கோத்தியோதம்.

(23) அரங்கோத்தி யோதனமு மூன்றுகுரு வம்பொன்
றிரங்குமுயிர் மாத்திரை யீரைந்தே—வரம்பெறுசீர்

இராசதாளம்.

(24) ராசதா ளம்வில் புலுத மிருதிருதம்
ஆசிரியன் கோல்புலுத மாறிரண்டே—பேசவரு

சிங்கவிக்கிரீடிதம்.

(25) சிங்கவிக்கி ரீடிதந்தான் சேரிரண்டு கோல்புலுதம்
அங்குருகோல் வில்புலுத மாங்குருபாம்—இங்கிவற்றில்
மாத்திரைகள் சொல்லின் மருவு பதினெட்டே
எத்து மிதற்கே யியல்பாகுங்—கூத்துகந்த

---

21. அங்கம் 0018 ஆக 4 (மா. 4)
நேர் = லகு.

22. அங்கம் 001110018 ஆக 9 (மா. 9)
கண் = திருதம். கலை = குரு.

23. அங்கம் 8881 ஒரு புலுதம் ஆக 5 (மா. 10)

24. அங்கம் 8 ஒரு புலுதம் 0081 மற்றொரு புலுதம். ஆக 6 (மா. 12)
ஆசிரியன் = குரு.

25. அங்கம் 11 ஒரு புலுதம் 818 ஒரு புலுதம் 8 மற்றொரு புலுதம்
ஆக 9 (மா. 18)
அங்குரு = அழகிய குரு. பாம்பு = புலுதம்.

வன்னமாலிகை.

(26) வன்னமா லிகைநால் வருசுழிரெண் டம்பாகும்
பின்னீர் சுழிகுருவு மேழெனவே—இங்கிலத்தில்

சதுரஸ்ரவர்னம்.

(27) சதுரம்வில் கோல்கோ விருதிருதஞ் சார்பாம்
பிதுமாத் திரைதா னிருநான்—கதிருங்

திசிரவன்னம்.

(28) திசிரவர்ன்னங் கோல்திருதஞ் சேரிரு கோல்வில்
அசிமாத் திரையஞ் சரையா—நசியாத

மிச்ரம்.

(29) மிச்சரமு மூன்று விழிவிழியில் வந்தவிந்து
மெச்சுமிவை மும்முறை மேற்பணிவில்—நச்சுமிரு
வட்டமிரு வில்கோல்வில் மாத்ரைபத்தொன் பான்முக்கான்
மட்டு மிதற்கு வகுத்தார்க—ளிட்ட

---

26. அங்கம் 000011008 ஆக 9. (மா. 7)

27. அங்கம் 81100 ஒரு புலுதம் ஆக 6 (மா. 8)

28. அங்கம் 10118 ஆக 5. (மா. $5\frac{1}{2}$)

அசி = ஐக்கியம். மாத்திரைகளனைத்தும் தாளத்தில் ஐக்கியம்.

29. அங்கம் 000 திருதசேகரம் 000 திருதசேகரம் 000 திருதசேகரம் ஒரு புலுதம் 8008818 ஆக 20 (மா. $19\frac{3}{4}$)

விழி = திருதம். பணி = புலுதம்.

விழியில் வந்த விந்துவென்றாலும், விந்து வந்த விழியென்றாலும் ஒன்றே. வட்டம் = திருதம்.

அரங்கப்ரதீபம்.

(30). அரங்கப்ர தீபம்வில் அங்கோ லிரண்டு
குருகோல்பாம் புக்குங் குறிமாத்—திரைபத்தாம்

அன்னநாதம்.

(31) அன்னநா தங்கோ லரவிருவட் டம்புலுதம்
மன்னுமிவ்வைந் தங்கத்தின் மாத்திரையெட்—
டின்னுங்கேள்

சிங்கநாதம்.

(32) சிங்கநாதங் கோல்வில் கோல்வில்லாய்ச் சேர்ந்தழகார்
இங்கிதற்கு மாத்திரைக ளெட்டே காண்—கொங்குலவு

மல்லிகாமோதம்.

(33) மல்லிகா மோதமிரு கோல்நாலு வட்டமுமாம்
நல்லவிதன் மாத்திரைபு நாலாகும்—சொல்லும்

சரபலீலே.

(34) சரபலீ லேக்கிருகோல் சார்திருத நாலோ
டிருகோ லறுமாத் திரையே—மருவும்

---

30. அங்கம் 81181 ஒரு புலுதம். ஆக 6 (மா. 10)

அங்கோல்=அழகிய லகு.

31. அங்கம் 1 ஒரு புலுதம் 00 மற்றொரு புலுதம் ஆக 6. (மா. 8)

அரவு=புலுதம். இருவட்டம்=புலுதம்.

32. அங்கம் 18810 ஆக 5 (மா. 8]

33. அங்கம் 110000 ஆக 6 (மா. 4)

34. அங்கம் 11000011 ஆக 8 (மா. 6)

அரங்காபரணம்.

(35) அரங்கா பரணமிரண் டம்பிருவில் லோர்பாம்
புரங்காணு மாத்திரைக ளொன்ப—திரங்காத்

துரங்கலீலை.

(36) துரங்கலீலை வட்டத் துணையோ டொருகோல்
இரண்டாகு மாத்திரைதா னெங்கு—நிரந்தரமாஞ்

சிங்கநந்தனம்.

(37) சிங்கநந்த னம்வில்வில் கோல்பாம்பு செங்கோல்வில்
லங்கிருவட் டம்வில்வில் லம்பொடுபாம்—பங்கொருகோல்
பாம்பு குருவிரண்டு பைங்கோலோர் காகபதம்
நாம்புகழு மாத்திரைபு நாலெட்டே—யோம்பு

செயஸ்ரீ.

(38) செயஸ்ரீபு மூன்றுகுரு தீட்டம் பிரண்டுக்
கியலாகு மாத்திரைக ளெட்டே—நயமார்

விசயநந்தனம்.

(39) விசயநந்த னஞ்செயஸ்ரீ மேல்கீழாய் மாற்றி
யிசையெட்டு மாத்திரையே யெண்ணி—லசையா

---

35. அங்கம் 1188 ஒரு புலுதம் ஆக 5 (மா. 9)
36. அங்கம் 001 ஆக 3 (மா. 2)
37. அங்கம் 881 ஒரு புலுதம் 1800881 ஒரு புலுதம் 1 ஒரு புலுதம் 811$\frac{1}{1}$ ஆக 18. (மா. 32)
38. அங்கம் 88811 ஆக 5 (மா. 8)
39. அங்கம் 11888 ஆக 5 (மா. 8)

குறிப்பு:— 38-ஆவது செயஸ்ரீயின் அங்கத்தை — அதாவது 88811 மேல் கீழாய் மாற்றினால் அதாவது விஜயநந்தனத்தின் அங்கம் 11888 ஆகின்றதென்பது 39 ஆவது கவியின் கருத்து.

பிரீதி.

(40) பிரீதிக் கிருகோ விருதிருதம் பேசு
மரீயபுகழ் மாத்திரைக ளாறி—னரையாங்

துதியகம்.

(41) துதியகமோ ரம்பிரண்டு தூயதிருத
மிதுமாத் திரைதா னிரண்டாம்—விதியார்

மகரநந்தம்.

(42) மகரநந் தந்திருதங் கோல்வில் வரிசை
புகலிரண்டு மூன்றொன்று போற்று—றகலாத

கீர்த்திதாளம்.

(43) கீர்த்திகோல்வில் பாம்பேறிப் பாம்புவில்கோல் கீழிறங்க
மாத்திரையீ ராறுசங்கம் வாயினில்வைத்—தார்த்த

---

40. அங்சம் 1100 ஆக 4. (மா. 4)

அரிய என்பது எதுகை நோக்கி அரீய என நீண்டது.

ஆறில் அரை = மூன்று.

41. அங்கம் 100 ஆக 3. (மா. 2)

42. அங்கம் 001118 ஆக 6. (மா. 6)

குறிப்பு :— நாற்பத்திரண்டாம் கவிக்கு இரண்டு திருதமும்; மூன்று லகுவும், ஒரு குருவும் ஆனதால், அது 'திருதங் கோல்வில் வரிசை புகலிரண்டு மூன்று ஒன்று எனக் கூறினர்.' 'போற்றுறு' என்பது இரண்டு மூன்று ஒன்று என்பதோடு சேராமல், 'போற்று' என்னுஞ் சொல் இடையில் கொடுத்துப் பிரிக்கப்பட்டது. ஆறு என்பது, மாத்திரை என அறிக.

43. அங்கம் 18 இரண்டு புலுதம் 81 ஆக 6 (மா. 12)

விஜயதாளம்.

(44) விசயமொரு பாம்பும்வில் மீட்டொருபாம் பும்வில்
லிசைமாத் திரைபத் திதற்கு—விசைய

செயமங்களம்.

(45) செயமங்க ளங்கோல்கோல் சேர்வில்கோல் கோல்வில்
நயமாத் திரையுமிரு நாலே—நயவான

இராஜவித்தியாதரம்.

(46) ராஜவித்தி யாதரமு நாலுமாத்தி ரைக்கொருகோல்
பேசுகுரு வொன்றிரண்டு பிந்துகமே—வீசுபுகழ்

மட்டயம்.

(47) மட்டயமி ரண்டாம்போர் வக்கிரநா லாந்திருத
மிட்டமுடன் மாத்திரையி ரண்டிலே—யெட்டுக்கும்

பிரகாச மட்டயம்.

(48) பிரகாச மட்டயமுக் கோலொருவில் பின்பு
மிருகோலேழ் மாத்திரைக ளெண்ணில்—வரமார்

---

44 அங்கம் ஒரு புலுதம் 8 மற்றொரு புலுதம் 8 ஆக 4 (மா. 10)

45. அங்கம் 118118 ஆக 6 (மா. 8)

46. அங்கம் 1800 ஆக 4 (மா. 4)

பிந்துகம் = திருதம். பிந்துகம் என்பதும், விந்துகம் என்பதும் ஒன்றே.

47. அங்கம் 1180000 ஆக 7 (மா. 6)

குறிப்பு:— 47 ஆம் கவியில் இரண்டிலையெட்டுக்கு என்பது ஆறு எண் என்பதனை குறிக்கின்றது.

48. அங்கம் 111811 ஆக 6 (மா. 7)

ஜயதாளம்.

(49) ஜயதாள முங்குரு கோல்குரு கோல்சாரு
பயவிழிபாம் பாமாத்ரை பத்தாம்—உயர்வாங்

குடுக்கதாளம்.

(50) குடுக்கதா ளந்தனக்குக் கூர்விழி யிரண்டம்
பெடுக்குமிரண் டெண்மாத் திரைமூன்—றிடுக்கணழி

நிச்சாருகம்.

(51) நிச்சா ருகமிலகு நீண்டலகு சேகரமு
மிச்சை வரு மாத்திரையி ரண்டேகால்—மெச்சுங்

கிரீடைதாளம்.

(52) கிரீடையி விந்துகங் கேள்பின்னோர் விந்தா
முரீயவிதன் மாத்திரை யொன்றேகால்—திரீபங்கி

திரிபங்கி.

(53) கோலாங் குருவார்பின் கோலாங் குருவாம்பின்
மேலாறு மாத்திரை மேலான—மாலாகுங்

---

49. அங்கம் 818100 ஒரு புலுதம் ஆக 7 (மா. 10)

உபயவிழி=இரண்டு திருதம்.

50. அங்கம் 0011 ஆக 4 (மா. 5)

51. அங்கம் 1 ஒரு லகுசேகரம் ஆக 2 (மா. $2\frac{1}{4}$)

52. அங்கம் oou ஆக 3 (மா. $1\frac{1}{4}$)

திரிபங்கி என்பது எதுகை நோக்கி திரீபங்கி என நீட்டல் விகாரம் பெற்றது.

53. அங்கம் 1818 ஆக 4 (மா. 6)

கோகிலப்பிரியம்.

(54) கோகுலப்பி ரீயங் குருலகுபாம் பொவ்வொன்று
மாகுமுயர் மாத்திரைக ளாறுக—வாகுமே

ஸ்ரீகீர்த்தி.

(55) ஸ்ரீகீர்த்தி வில்லிரண்டு செப்பம் பிரண்டிதற்கு
மாகீர்த்தி மூன்றிரண்டோர் மாத்திரையே—தூகீர்த்தி

விந்துமாலிகை.

(56) விந்துமாலி கைக்கோர்வில் நாலுவிழி மேலொருவில்
அந்தமுறு மாத்திரைக ளாறுகும்—விந்தைச்

சமதாளம்.

(57) சமங்கோ லிரண்டிரண்டு சக்கரமோர் விந்துக்
கமைமாத்ரை மூன்றேகா லாகு—மிமையாத

நந்தனம்.

(58) நந்தனங் கோலிரண்டு நற்சுழியி ரண்டோர்பாம்
பிந்தவகை மாத்திரைக ளோராறே

---

54. அங்கம் 81 ஒரு புலுதம் ஆக 3 (மா. 6)

55. அங்கம் 8811 ஆக 4 (மா. 6)

இதில் மூன்று, இரண்டு, ஒன்று என்பது
ஆறு என்பது கருத்து.

56. அங்கம் 800008 ஆக 6. மா. 6)

57. அங்கம் 1100u ஆக 5 (மா. $3\frac{1}{4}$)

சக்கரம்=திருதம்.

58. அங்கம் 1100 ஒரு புலுதம் ஆக 5 (மா. 6)

உத்தியட்சணம்.

(59) உத்தியட்ச ணங்கோ விரண்டோ டொருகுருவா
நந்துமிதன் மாத்திரைக ளைலாம்—சத்திமிகு

டங்கிதாளம்.

(60) தங்கிதாள மோர்குரு சாரொருகோ லோர்குருவா
மிங்கிதற்கு மாத்திரையைந் தென்பார்கள்—துங்கமிகு

வர்னமட்டிகம்.

(61) வர்னமட்டி கைக்கிருகோல் வட்டமிரண் டோர்கோல்
பின்னுமிரு கண்மாத்ரை பேசிலைந்தே—பன்னும்

அபிநந்தனம்.

(62) அபிநந்த னஞ்சுழிகோ லாசான் கோல்வட்டம்
சுபமுதவு மாத்திரைகள் சொல்லஞ்—சுபசார

அந்தரக்கீரீடை.

(63) அந்தரக்கி ரீடைமுக்க ணத்தோ டனுதிருதம்
வந்ததிதற்கா லில்லையிரு மாத்திரைக்கே—சிந்தனைசெய்

---

59. அங்கம் 118 ஆக 3 (மா. 4)

60. அங்கம் 818 ஆக 3 (மா. 5)

61. அங்கம் 1100100 ஆக 7 (மா. 5)

62. அங்கம் 01810 ஆக 5 (மா. 5)

63. அங்கம் ooou ஆக 4 (மா $1\frac{3}{4}$)

கவியில், காலில்லை யிருமாத்திரைக்கே என்பது,
ஒன்றேமுக்கால் மாத்திரையென்றுணர்க.

மல்லிதாளம்.

(64) மல்லதாளங் கோல்நாலு வட்டமிரண் டோர்துடி
யல்லல்போ மாத்திரைக ளஞ்சேகா—லெல்லைவெல்லுங்

தீபகம்.

(65) தீபகமி ரண்டுவட்டஞ் செங்கோ லிரண்டிருவில்
பாபமறு மாத்திரைகள் பாரேழே—பூம்

அனங்கம்.

(66) அனங்கதாளங் கோல்பணிகோல் கோல்குரு பார்பாகு
மினங்களுக்கு மாத்ரைமூன்றே டெட்டே—கனங்கொள்

விடமதாளம்.

(67) விடமதாள நாலுவட்டம் விந்துநால் வட்டம்விந்
தடன்மாத் திரைநா லரையே—குடமுழவ

நந்திதாளம்.

(68) நந்திக்குக் கோலிரண்டு நற்கொம் பிரண்டிருகோல்
வந்தவில்லி ரண்டொன்பான் மாத்திரையே—வந்தனைக்

---

64. அங்கம் 111100u ஆக 7 (மா. $5\frac{1}{4}$)

துடி = விராமம்.

65. அங்கம் 001188 ஆக 6 (மா. 7)

66. அங்கம் 1 ஒரு புலுதம் 118 மற்றொரு புலுதம் ஆக 6. (மா. 11)

67. அங்கம் 0000u0000u ஆக 10 (மா. $4\frac{1}{2}$)

68. அங்கம் 11001188 ஆக 8 (மா. 9)

குந்ததாளம்.

(69) குந்தமது நாலிலகு கூடக் குருவொன்று
விந்தமிகு மாத்திரையு மேவாறே—சொந்த

முகுந்ததாளம்.

(70) முகுந்ததாளங் கோல்கண்கண் கோல்வில் மொழியு
மகுந்தங்கு மாத்திரைக ளைந்தே—சுகந்தங்கும்

ஏகதாளம்.

(71) ஏகமேக வட்டமரை மாத்திரை யிதனருத்தந்
தேக மூயிருஞ் சிவமயமே—ஆகுமது

பூர்ணகங்காளம்.

(72) பூரணகங் காளம் புகழ்விழிநா லோர்கோல்வில்
மாபணம்பி றப்பறுக்கு மாத்திரையஞ்—சாரணஞ்சொல்

கண்டகங்காளம்.

(73) கண்டகங்கா ளங்கண் ணிரண்டிரண்டு காட்டுகுரு
அண்டாறி மாத்திரைக ளஞ்சாகுங்—கண்ட

---

69. அங்கம் 11118 ஆக 5 (மா. 6)

70 அங்கம் அங்சம் 10018 ஆக 5 (மா. 5)

71. அங்கம் 0 (மா. ½)

72. அங்கம் 000018 ஆக 6 (மா. 5)

மாரணம் என்பது—எதுகை நோக்கி மாரணமென்று
நீட்டல் விகாரம் பெற்றது.

73. அங்கம் 0088 ஆக 4 (மா. 5)

சமகங்காளம்.

(74) சமகங்கா ளங்கு ருகுரு கோ லுஞ்சார
வமைமாத் திரைகளஞ்சே யாகுஞ்—சமையும்

விடமகங்காளம்.

(75) விடமகங்கா ளங்கோல்வில் வில்லிதற்கு மாத்திரை
யடலாக மேற்சொன்ன வைங்தே—திடமார

சதுரதாளம். (சதுஸ்தாளம்)

(76) சதுரங் குருவொன்றுஞ் சக்கர மூன்று
மதுமாத் திரைமூன் றரையா—மதுரமிகு

டொம்பிளி.

(77) டொம்புள்ளி யம்பிரண்டு சொல்லிலகு சேகரமொன்
றம்புவியில் மூன்றேகா லாமாத்திரை—நம்பு

அபங்கம்.

(78) மபங்கதாள மோரம் பரவொன்று மாத்திரை
சுபமுதவு நாலென்று சொல்வர்—விபவமிகு

இராஜகங்காளம். (இராஜஹோங்காளம்)

(79) ராஜகங்கா ளங்குருகோல் வில்சக்க ரங்களிரண்
டாசகற்று மாத்திரைக ளாறுகு—நேச

---

74 அங்கம 881 ஆக 3 (மா. 5)

75. அங்கம் 188 ஆக 3 (மா. 5)

76. அங்கம் 8000 ஆக 4 (மா. $3\frac{1}{2}$)

77. அங்கம் 11 ஒரு லகுசேகரம் ஆக 3 (மா. $3\frac{1}{4}$) (111u)

78. அங்கம் 1 ஒரு புலுதம் ஆக 2 (மா. 4) அரவு=புலுதம்.

79. அங்கம் 81800 ஆக 6 (மா. 6)

இலகுசேகரம்.

(80) லகுசே கரமிலகு சேகரமே லான
நலமாத் திரையைங்கா லுடிற்—றலைமைப்

பிரதாபசேகரம்.

(81) பிரதாப சேகரம் பேசு பணிகண்
திருத மறுதிருதஞ் சேர்மாத்—திரைநாலே

ஜேகத்ஜெம்பை. (சேகர செம்பை)

(82) கால்ஜெகத் ஜெம்பைகுரு கண்திருத சேகரமா
மூல்படிக்கு மாத்திரைகள் மூன்றேகால்—மேலுந்

திருதசேகரம்.

(83) திருதசேக ரந்தான் திருதம் விராம
மருவு மிதுமுக்கால் மாத்திரை—தருமச்

சதுர்முகம்.

(84) சதுர்முகதா ளங்குருநேர் சாற்றுகுரு சர்ப்ப
மிதுமாத் திரைதானு மெட்டே—வருவதுதான்

பின்னசதுர்முகம்.

(85) பின்ன சதுர்முகந்தான் பேணரவுங் கோலுமே
நன்னயமா மாத்திரைபு நாலாகும்—பின்னமிலாச்

---

80. அங்கம் இரு லகுசேகரம் ஆக 1 (மா. 1¼)

81. அங்கம் 800u ஆக 4 (மா. 4¼) (ஒரு புலுதம் O ஒரு திருதசேகரம்)

82. அங்கம் 8u திருதசேகரம் ஆக 3 (மா. 3¼)

83. அங்கம் 0u ஆக 2 (மா. ¾)

84. அங்கம் 818 ஒரு புலுதம் ஆக 4 (மா. 8) (ஒரு புலுதம் 18)

சர்ப்பம் = புலுதம்.

85. அங்கம் ஒரு புலுதம் 1 ஆக 2 (மா. 4)

ஜெம்பைதாளம்.

(86) *செம்பை திருதம் திருத விராமமும்மாம்*
*அம்புமிரண் டேகா லதுமாத்ரை—பின்னமிலா*

பிரதிமட்டியம்.

(87) *பிரிதிமட்ட யங்கோல் குருகோல்வில் பின்னு*
*மிருகோலு மாத்திரைக ளெட்டே—திருதி*

திருதீயதாளம்.

(88) *திருதமொன் றி ரண்டு திருதசேக ரத்துக்*
*கிருமாத் திரைபுறமுள் ளெங்கும்—பெருகும்*

வசந்தம்.

(89) *வசந்தமுக்கோ லொடு வருகுருமூன் றுக்கு*
*மிசைந்தமாத்ரை யொன்ப திணங்கும்—கசிந்த*

இலளிதம். (லலிதம்)

(90) *லளித மிருசுழிவில் கோலுக்கு நாலாந்*
*தெளிதருமா மாத்திரைகள் செப்பில்—வளமை*

இரதிதாளம்.

(91) *இரதிக் கிலகுகுரு வெண்ணவரு மும்மாத்*
*திரையுலகிற் சீவருக்குச் செய்யும்—பெரிய*

---

86. *அங்கம்* 0 *திருதசேகரம் ஆக* 2 (*மா*. $2\frac{1}{4}$)

87. *அங்கம்* 181811 *ஆக* 6 (*மா*. 8) (118181)

88. *அங்கம்* 0 *இரண்டு திருதசேகரம் ஆக* 3 (*மா*. 2)

89. *அங்கம்* 111888 *ஆக* 6 (*மா*. 9)

90. *அங்கம்* 0081 *ஆக* 4 (*மா*. 4) (10 *திருதசேகரம்*.)

91. *அங்கம்* 18 *ஆக* 2 (*மா*. 3)

**கருணயதி. (கருணம்)**

(92) கருண யதிதனக்குக் காணுசுழி நாலே
யிருமாத் திரையே யிதற்கு—வருமங்க

**ஷட்தாளம்.**

(93) சட்டஞ் சடுதிருதஞ் சார்மூன்று மாத்திரைக
ளிட்ட மகலா விதற்காகுங்—கட்டழகார்

**இரத்தினம்.**

(94) ரத்னமிரு வட்டமம்ப ராவுக்கு மாத்திரையைந்
தத்தனரு ளூலி னடைவாகுஞ்—சித்தமகிழ்

**வர்னயதி. (வருணயதி.)**

(95) வர்ன யதிக்கிருகோல் மாசுணமி ரண்டாகு
மின்னதுக்கு மாத்திரைக ளெட்டாகுந்—தன்னிகரில்

**இராஜநாராயணி.**

(96) ராசநா ராயணிசீ ராமிருநகண் கோல்குருகோல்
பேசுகுரு மாத்திரையேழ் பேசுங்கா—லாசை

**மதங்கம்.**

(97) மதங்கங் குருவொன்று வட்ட மிரண்டு
மிதுமூன்று மாத்திரைக ளீங்கற்—புதமாகும்

---

92. அங்கம் 0000 ஆக 4 (மா. 2)
93. அங்கம் 000000 ஆக 6 (மா. 3)

சடுதிருதம்=ஆறு திருதம்.

94. அங்கம் 001 ஒரு புலுதம் ஆக 4 (மா. 5)
95. அங்கம் 11 இரண்டு புலுதம் ஆக 4 (மா. 8)

மாசுணம்=புலுதம்.

96. அங்கம் 001818 ஆக 6 (மா. 7)
97. அங்கம் 800 ஆக 3 (மா. 3)

பார்வதிலோசனம்.

(98) பார்வதி லோசனம் பாரிருகண் பாரிருகோல்
சேர்வ திருதிருதம் சீர்வில்வில்—நேர்மா

லொருகுருவி ரண்டிலகுக் குற்றபதி னாறே
திருமாத் திரையதனைச் செப்பிற்—றருமருவு

காருதி.

(99) காருதிக்கு முக்கண் கனதிருத சேகரமு
மேருதிக்கு மாத்திரையி ரண்டேகால்—பார்மருவு

ஸ்ரீநந்தனம்.

(100) ஸ்ரீநந் தனமொருவில் செங்கோ லிரண்டொருபாம்
பானந்த மாத்திரைக ளாறேடொன்—றுள

செயதாளம்.

(101) செயதாளங் கோல்கோல்வில் சேர்கோல்கோல் கண்ணுந்
தருமா றரைமாத்திரை தானு—மிகுலீலை

இலீலை.

(102) வில்லொன்று மம்பொன்று மேலுந் திருதமொன்று
சொல்மூன் றரைமாத்திரை தூயமறை—வல்ல

---

98. அங்கம் 001100881111811 ஆக 15 (மா 16)
(001100818111811)

99. அங்கம் 000 திருதசேகரம் ஆக 4 (மா. $2\frac{1}{4}$)

100. அங்கம் 811 ஒரு புலுதம் ஆக 4 (மா. 7)

101. அங்கம் 118110 ஆக 5 (மா. $6\frac{1}{2}$) (181100 ஒருபுலுதம்)

102. அங்கம் 810 ஆக 3 (மா. $3\frac{1}{2}$)

விலோகிதம்.

(103) விலோகி தமிலகுவில் விந்துகமி ரண்டோர்
உலாவுமணி மாத்திரையு மோரேழ்—குலாவு

இலளிதப்பிரியம்.

(104) லளிதப் பிரியமிரு கோல்வில் லகுவில்
விளமைபெறு மாத்திரைக ளேழே—வளமைச்

ஜெனகம்.

(105) ஜெனக மிருகுருவுஞ் சேர்நாலு கோலோர்
தனுசு மிருலகுவுஞ் சாருந்—தனுசிரண்டுங்
கொண்டபதி ஞொரங்கங் கூட்டப் பதினாறே
கண்டவியல் மாத்திரை கள்கமலங்—கொண்ட

இலக்குமீசன்.

(106) இலக்குமீசன் கண்ணிரண் டோர் விந்தோ டிலகு
விலக்க மிரண்டரவொன் றெண்ணக்—கலக்கமிலா

இராகவர்த்தனம். (இராஜவர்த்தனம்)

(107) மாத்திரையா றேகால் வருமிராக வர்த்தனந்தான்
நேத்திரமூன் றோர்விந்து நேரொன்று—மாத்திரை

---

103. அங்கம் 1800 ஒரு புலுதம் ஆக 5 (மா. 7) (0108)

104. அங்கம் 11818 ஆக 5 (மா. 7)

105. அங்கம் 88111181188 ஆக 11 (மா. 16) தனுசு=குரு.
(1111881188)

106. அங்கம் 00u11 ஒரு புலுதம் ஆக (11 O ஒரு திருதசேகரம் ஒரு புலுதம்) (மா. 6¼) அரவு=புலுதம்.

107. அங்கம் 000u1 ஆக 5 (மா. 2¾) ( O திருதசேகரம் புலுதம்)

பெத்தாபரணம்.

(108) பேசுமிரண் டேமுக்கால் பெத்தா பரணங்கோல்
மாசுணங்கோல் அஞ்சாகு மாத்திரை—பேசுமிந்த

தாள நூற் றெட்டுந் தகிங்கிணத் தோ மென்றுடெண்
டோளனடி யேகாட்டுந் தொட்டு.

நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா முற்றிற்று.

——:;——

---

108. அங்கம் 1 ஒரு புலுதம் 1 ஆக 3 (மா. 5)

## வாசகர்களுக்கு ஓர் குறிப்பு.

நூற்றெட்டுத் தாளங்களை விவரிக்கும் ‘சங்கீத சந்திரிகை’ ‘சங்கீத ஸ்வயபோதினி’ ‘காயக பாரிஜாதம்’ ‘சங்கீத ரத்னகரம்’ ‘மாத்திரை தாள பத்தியங்கள்’ முதலிய நூல்களுட் காணும் தாளப்பகுதிகளில் தாளப்பெயர்களும், அங்கங்களும், மாத்திரைகளும் ஒன்றுக்கொன்று பெயர்கள் மாறுபட்டும், அங்கங்கள் வேறுபட்டும், மாத்திரைகளின் அளவு மிகுந்தும் குறைந்தும் காணப்படுகின்றன. ஆயின், இவற்றிற்குரிய காரணத்தை அவ்வந்நூலாசிரியர்கள் தெளிவுபெறக்கூறாது மௌன நிலையிற் சென்றனர். இது, இசைத்தொழில் வல்ல பலர்க்கும் ஐயத்தை விளைவித்ததோடன்றிக் கலக்கத்தையும் உண்டு பண்ணின. இவற்றால் மிகப்பலர் உண்மையறிய மாட்டாமல் மயங்கிக்கொண்டிருக்கின்றனர். இக்குறையைப் பலர் வாயிலாகக் கண்டும் கேட்டும் அறிந்த ஆடலாசிரியரும், மாபெரும் புலவருமாகிய திருவம்பலஞர், தாம் ஆசிரியர் மூலமாகவும், ஆராய்ச்சி மூலமாகவும், அநுபவ வாயிலாகவும் நன்கறிந்தவற்றைச் சங்கீத வித்துவான்களுக்கும்,

இசைக்கருவி வல்லோர்களுக்கும், உபகாரமாயிருக்கும்பொருட்டுத் தமிழில் "நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா" என்ற அரிய இந்நூலை எழுதி உதவினர். அந்நூலில் கண்டவாறே, பெயர், அங்கம், மாத்திரை முதலியனவற்றை இந்நூலின் 23 பக்கங்களிலும் தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளன. பிற நூல்களில் இவற்றிற்கு மாறுபட்டுக் காணும் பெயர், அங்கம், மாத்திரை முதலியவற்றையும், அவ்வத் தாளங்களின் நேர் வரிசை களில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஆனதால், தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவிகளில் வல்ல வித்துவான்களும், பிற இசைப் புலவர்களும் ஐயந்தெளிந்து இந்நூலில் குறிக்கப்பட்டிருக்கும் தாளங்க ளுக்குரிய அங்கங்களும், மாத்திரைகளுமே உண்மையானதென்று உறுதி யுடன் நம்பி, கைக்கொண்டு பயனடையும்படி நினைவுறுத்துகின்றேன்.

இந்நூலாசிரியரின் திறமையினையும், புலமையினையும் நன்குணர்ந்த இசைவல்ல புலவரொருவர், பாராட்டிக்கூறிய இரண்டு வெண்பாக்கள் இவ்வுண்மையினை நன்கு தெளிவாக்கவல்லன. அவை:—

1. மாட்சிதிரு வம்பலவன் மாத்திரைதா ளத்தினது
ஆட்சியினைக் கண்டளக்கவே—சூட்சியின்றி
காட்டுநூற் றெட்டுக் கலிவெண்பாக் கூறினன்
தாட்டிகத்தைப் போற்றிடுவோம் தான்.

2. கம்பர் புகழேந்திக் காளமே கங்கூத்தர்
உம்பர் புகழ்ப் பற்பலரும் ஓர்முகத்தால்—செம்மைபெற
ஓதியபாவிற் கோர்கை ஓங்குதிரு வம்பலவர்
நீதிமாத் திரைவெண்பா நீடு.

என்பன.

குருதேவா பிரஸ், ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்.

## நூற்றெட்டு முப்பத்தைந்து தாளங்களுக்குரிய அங்கங்களின் வடிவங்களும், பெயர்களும், மாத்திரைகளும்.

---

| | வடிவம். | பெயர். | மாத்திரை. |
|---|---|---|---|
| 1. பிறை. | u | — துடி, விந்து, விராமம், அனுதிருதம் | ¼ |
| 2. மதி. | o | — சுழி, கண், வட்டம், விழி, திருதம், கொம்பு, விந்துகம், பக்கரம், கணம், பிந்துகம் | ½ |
| 3. கணை. | \| | — அம்பு, கோல், லகு, சிறு, நேர் (ஆம்பு page 11) | 1 |
| 4. வில். | o o | — தனுசு, ஆசான், ஆசிரியன், குரு, வக்கிரம், கலை | 2 |
| 5. பாம்பு. | \| o o | — புலுதம், உயிர், மாசுணம், அணி, சர்ப்பம், அரவு, பிணி | 3 |
| 6. புள்ளடி. | + | — காகபாதம் | 4 |
| 7. | u o | — திருத விராமம், திருத சேகரம், விழியில் வந்த விந்து, விந்து வந்த விழி | ¾ |
| 8. | u \| | — லகுவிராமம், லகுசேகரம், கோல்சேகரம் | 1¼ |

இவற்றின் பரியாய நாமம் முறையே அனுதிருதம், திருதம், லகு, குரு, புலுதம், காகபாதம் என்பனவாம்.

மேற்குறித்த ஆறுவித அங்கச் செய்கைகளினால் முறையே 1, 2, 4, 8, 12, 16, என்ற அட்சர காலங்கள் ஏற்பட்டன. திருதசேகரம் இரண்டு அட்சர காலங்கள் கொண்ட திருதத்திற்கும், நான்கு அட்சர காலங்கள் கொண்ட லகுவிற்கும் இடையில் மறைந்திருக்கும். மூன்று அக்கர காலத்திற்குத் ‘**திருதசேகரம்**’ என்று பெயர் கூறப்படும். ஆகவே **அனுத்திருதம், திருதம், லகு, குரு, புலுதம், காகபாதம்,** என்ற அங்கங்கள் ஆறும் **“ஷடாங்கம்”** எனப்படும். இவற்றுடன் திருதசேகரம் சேர்ந்தால் சப்தாங்கம் எனப்படும். சப்தம் = ஏழு. இந்த ஏழு அங்கக்கிரமத்தை அநு

சரிக்கும் போது அநுத்ருதம், திருதம், குரு, புலுதம், காகபாதம் முதலியன எக்காரணங் கொண்டும் பேதப்படுவதில்லை. அகவை ளுக்குள்ள 1, 2, 4, 8, 12, 16, முதலிய அட்சர காலங்கள் எப்பொழுதும் ஒரே நிர்ணயமாயிருக்கும். ஆனல் 'லகு' அங் கம் ஒன்று மட்டும் ஐந்து பேதங்களுக்கும் உள்ளாகின்றன. அவ் வைந்து பேதங்கள், ஐந்து ஜாதிகளேயாம். அவை—

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சதுஸ்ரஜாதி | லகுவிற்கு | நான்கு | அட்சரகாலம் |
| 2. | திஸ்ரஜாதி | ,, | மூன்று | ,, |
| 3. | மிஸ்ரஜாதி | ,, | ஏழு | ,, |
| 4. | கண்டஜாதி | ,, | ஐந்து | ,, |
| 5. | சங்கீர்ணஜாதி | ,, | ஒன்பது | ,, என்பன. |

மேற்படி ஐந்து ஜாதிகளும் லகு பேதங்களே யொழிய வேறு மாற்றமில்லை. மேற்குறித்த ஐந்து ஜாதிகளுள் அடங்கியிருக்கும் அங்கங்களில் உள்ளடக்கமாயிருக்கும் மாத்திரைப் பிரமாணமே '**களை**' எனப்படும். இது ஒவ்வொரு அட்சரத்துள்ளும் அடங்கி யிருக்கிறது. இக்களை, **ஒருகளை, இருகளை, நாற்களை** என மூன்று வகைப்படும். இவற்றை லய ஞான விற்பன்னர்கள் முறையே **ஏககளை, த்விகளை,** (த்வி=இரண்டு) **சதுர்களை** (சதுர்=நான்கு) எனக்கூறுவர்.

ஏககளையாவது அட்சரகாலமாகிய மார்க்கக்கிரியை, தேசிகக் கிரியை என்னும் இருவகைக்குரிய நிஸ்ஸப்தம் - ஸஸப்தம் என் னும் பிரிவுகளுக்குள்ளான கிரியையோடு வருவது. உதாரணம் - '**ததிதக**' என்ற நான்கையும் ஒரே களைப்படுத்துவது.

II. த்விகளையாவது— மேற்படியை இரட்டித்து வருவது '**ததிதகதிகிணதோம்**' என்ற எட்டையும் ஒரே களைப்படுத்துவது.

III. சதுர்களையாவது— மேற்படியை இரட்டித்துவருவது. '**ததிதக தகதிமி தகதி** ததிகிணதொம்' என்ற பதினறையும் ஒரே களைப்படுத்துவது.

இங்ஙனம் உள்ளடங்கியிருக்கும் களைகளின் சேர்க்கைகளி னல், மேலே காட்டிய ஜாதிகளின் எண்ணிக்கை வர்க்கமாகவே, இவைகளுக்கு '**கெதி**' என்னும் எண்ணிக்கை பொருந்தி **சதுரஸ்ர கெதி, திஸ்ரகெதி, மிஸ்ரகெதி, கண்டகெதி, சங்கீர்ண கெதி,** என்று ஆறுகதிகளாகி அவற்றிற்குரிய இலட்சணங்களும் அமைந்து விளங்குவதற்காயிற்று.

# நூற்றெட்டு மாத்திரைத் தாளங்களின் பெயர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | சச்சபுடம் | 29 | மிச்ரம் |
| 2 | சாசபுடம் | 30 | அரங்கப்ரதீபம் |
| 3 | சற்பிதா புத்திரகம் | 31 | அன்னநாதம் |
| 4 | சம்பொற்கட்டம் | 32 | சிங்கநாதம் |
| 5 | உத்கடிதம் | 33 | மல்லிகாமோதம் |
| 6 | ஆதிதாளம் | 34 | சரபலீலை |
| 7 | தர்ப்பணம் | 35 | அரங்காபரணம் |
| 8 | சச்சரி | 36 | துரங்கலீலை |
| 9 | சிங்கலீலை | 37 | சிங்கநந்தனம் |
| 10 | கந்தர்ப்பணம் | 38 | செயஸ்ரீ |
| 11 | சிங்கவிக்கிரமம் | 39 | விசயநந்தனம் |
| 12 | சீரங்கதாளம் | 40 | பிரீதி |
| 13 | இரதிலீலை | 41 | துதியகம் |
| 14 | ஆரங்கம் | 42 | மகரநந்தம் |
| 15 | பரிக்கிரமம் | 43 | கீர்த்திதாளம் |
| 16 | பிரத்தியாங்கம் | 44 | விஜயதாளம் |
| 17 | கசலீலை | 45 | செயமங்களம் |
| 18 | திரிபின்னம் | 46 | இராஜவித்தியாதரம் |
| 19 | வீரவிக்ரமம் | 47 | மட்டயம் |
| 20 | அன்னலீலை | 48 | பிரகாச மட்டயம் |
| 21 | வர்னபின்னம் | 49 | ஜயதாளம் |
| 22 | இராஜசூடாமணி | 50 | குடுக்கதாளம் |
| 23 | அரங்கோத்தியோதனம் | 51 | நிச்சாருகம் |
| 24 | இராசதாளம் | 52 | கிரீடைதாளம் |
| 25 | சிங்கவிக்கிரீடிதம் | 53 | திரிபங்கி |
| 26 | வன்னமாலிகை | 54 | கோகிலப்பிரியம் |
| 27 | சதுரஸ்ரவர்னம் | 55 | ஸ்ரீகீர்த்தி |
| 28 | திசிரவன்னம் | 56 | விந்துமாலிகை |

| | | | |
|---|---|---|---|
| 57 | சமதாளம் | 83 | திருதசேகரம் |
| 58 | நந்தனம் | 84 | சதுர்முகம் |
| 59 | உத்தியட்சணம் | 85 | பின்னசதுர்முகம் |
| 60 | டங்கிதாளம் | 86 | ஜெம்பைதாளம் |
| 61 | வர்னமட்டிகம் | 87 | பிரதிமட்டியம் |
| 62 | அபிநந்தனம் | 88 | திருதீயதாளம் |
| 63 | அந்தரக்கிரீடை | 89 | வசந்தம் |
| 64 | மல்லிதாளம் | 90 | இவளிதம் (லலிதம்) |
| 65 | தீபகம் | 91 | இரதிதாளம் |
| 66 | அனங்கம் | 92 | கருஞ்யதி (கருணம்) |
| 67 | விடமதாளம் | 93 | ஷட்தாளம் |
| 68 | நந்திதாளம் | 94 | இரத்தினம் |
| 69 | குந்ததாளம் | 95 | வர்னயதி (வருஞ்யதி) |
| 70 | முகுந்ததாளம் | 96 | இராஜநாராயணி |
| 71 | ஏகதாளம் | 97 | மதங்கம் |
| 72 | பூர்ணகங்காளம் | 98 | பார்வதிலோசனம் |
| 73 | கண்டகங்காளம் | 99 | காருதிதாளம் |
| 74 | சமகங்காளம் | 100 | ஸ்ரீநந்தனம் |
| 75 | விடமகங்காளம் | 101 | செயதாளம் |
| 76 | சதுரதானம் (சதுஸ்தாளம்) | 102 | இலீலை |
| 77 | டொம்பிளி | 103 | விலோகிதம் |
| 78 | அபங்கம் | 104 | இலளிதப்பிரியம் |
| 79 | இராஜகங்காளம் | 105 | ஜெனகம் |
| 80 | இலகுசேகரம் | 106 | இலக்குமீசன் |
| 81 | பிரதாபசேகரம் | 107 | இராகவர்த்தனம் (இராஜவர்த்தனம்) |
| 82 | ஜெகத்ஜெம்பை (சேகரசெம்பை) | 108 | பெத்தாபரணம் |

ஆகத் தாளங்கள் நூற்றெட்டு.

# விளம்பரம்.

## நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா

(இதுவரையில் தமிழில் வெளிவராத இனிய நூல்)

"நூற்றெட்டு மாத்திரைத் தாளக் கலிவெண்பா" என்ற மார்க்க தாள நூலொன்று அச்சேறியிருக்கிறது. விலைக்குத் தயார். காலஞ்சென்ற நூலாசிரியர் திருவம்பலனார் மைசூர் சமஸ்தானத்தாரால் நன்கு மதிக்கப்பெற்று அச்சமஸ்தான ஆடலாசிரியராகப் புகழ் பெருக விளங்கி யிருந்தவர். வடமொழி, தென்மொழிகளில் புலமை சிறந்தவர். இந்நூலில் நூற்றெட்டுத் தாளங்கள் ஏற்பட்டதன் விவரம், மாத்திரை, தாள இலக்கணம், அங்க விவரம், தாளம் போடும் விதம், மற்றும் அரிய பெரிய இனிய விஷயங்கள் கற்பவர்கட்குப் பெரிதும் இன்பம் எய்தும்படி அழகுபெறக் கோக்கப் பெற்றிருக்கின்றன. நூற்றெட்டுத் தாளங்கள் பெரும்பகுதி வடமொழியிலும், தெலுங்கு பாஷையிலும் அச்சேறி வருகிறதேயன்றி, தாய் மொழியாகிய தமிழில் வெளிவருவதேயில்லை. இந்நூல்தான் தமிழ் மொழியில் முதன் முதலாகத் தென்னாட்டுத் தமிழர்கள் கண்டு மகிழும்படி அருமையான விஷயங்களுடன் அழகாக வெளிவருகிறது. சங்கீத லயஞான வித்துவான்கட்கு நல்விருந்தாக மிளிரும் இதனை, ஒவ்வொருவரும் பெற்று இன்புறும்படிக் கோருகிறேன். இதன் விலை அணா 0—4—0 ஐந்தரையணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு பிரதி தபாலில் அனுப்பப்படும்.

விலாசம் :—

சி. கு. நாராயணசாமி முதலியார்,

பேரூர் P. O.

(Via) கோயமுத்தூர்.

# விளம்பரம்.

(லயஞான விற்பனர்களுக்குப் பெரும்
பயன் தரும் அரியதோர் நூல்)

## தமிழ் மொழியில் இதுவரையும் வெளிவராதது.

"முப்பத்தைந்து தாளதர்ப்பணம்" என்ற இத்தமிழ் நூல், தெலுங்கு – தமிழ் மொழிகளில் நல்ல பாண்டித்தியமும், லட்சண - லட்சிய வித்துவான் எனப்பெயர் சிறந்தவரும், தவில் வாத்தியத்தில் கோயமுத்தூர் ஜில்லாவில் பெயர் சிறந்து பெரும்புகழுடன் விளங்கிச் சமீபத்தில் காலஞ்சென்ற மகா வித்துவானுமாகிய வ. முனிசாமி பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. இந்நூல், இராகதாளங்கள் கற்ற சங்கீதலயஞான விற்பனர்கட்கும், சங்கீத மாணவர்கட்கும், பெரும் பிரயோசனத்தைத் தரவல்லது. தமிழ் மொழியில் இதுவரையில் வெளிவராத இவ்வரிய நூலைத் தென்னாட்டுச் சங்கீத விற்பனர்கள் ஒவ்வொருவரும் பெற்று அதன் அருமை பெருமைகட்கு இன்புறுவார்களாக. ஆசிரியர் உருவப் படமுடைய இந்நூலின் விலை அணா நான்கே. 0—4—0.

ஐந்தரையணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு பிரதி தபாலில் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

விலாசம்

சி. கு. நாராயணசாமி முதலியார்,
பேரூர் P. O.,
(Via) கோயமுத்தூர்.